In the unlikely event you happen to find a cheaper airfare,
WE WILL BEAT IT BY 50%*
bestandlesstravel.com.au
CALL 1300 GO BEST 1300 46 2378
best&lesstravel

# தமிழ் ஒசை
ஆஸ்திரேலியா

December 2014
Monthly Magazine திசையெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வோம் Free Issue

For Authentic Indian & Sri Lankan Food
Amuthasurabi
Indian&Sri Lankan Food Bar
Catering Specialists
42 Burlington Road, HOMEBUSH 2140
Ph: 02 9746 5283 Mob: 0421 100 668

AMUTHASURABI

High Quality Indian & Sri Lankan Spices at Low Prices !
Amuthasurabi
Spices
38 Burlington Road, HOMEBUSH 2140
Ph: 02 8095 8887 Mob: 0421 100 668



தமிழுக்கு ஊழியம் செய்த எஸ்.பொ.

ஆண்டாள் வரலாறு எழுதும் ஆஸ்திரேலியத் தம்பதி

பாடும் நிலா பாலசுப்ரமணியம்

PERPETUA MONEY TRANSFER
Perpetua Money Transfer
Same day Bank Transfer or Home Delivery, Any bank in Sri Lanka
28/15-23, Hub Arcade, Langhorne st, Dandenong, Vic 3175 Ph : 03 8712 1406 Mob : 0423 094 478

SRI GANESH SELECTIONS
TEXTILE, POOJA ITEMS & FRESH JASMINE
SAREES
SALWAR
COSMETICS
STATUES
GIFT ITEMS
118 Pendle Way, Pendle Hill, NSW 2145 Tel : 02 9636 3823

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# austarc constructions

..building quality not quantity









NEW HOMES • EXTENSIONS • RENOVATIONS

For professional advice from a Master Builder.
contact **Satha.**

REGISTERED Building Practitioner

0477 914 678

Master Builder

www.austarcconstructions.com.au



*Don't look around for Accountants......*

*go to..*

## Professional Accountants Services

**ACCOUNTANTS & REGISTERED TAX AGENT**

We Specialise in all type of accounting for business and individuals.

- Sole Traders or Partnerships Tax Returns
- Complete Bookkeeping Services
- Individuals Tax Returns
- Company Tax Returns
- Company Formation
- GST & BAS
- DIY Superannuation
- Investment Planning & Opportunities

**LODGE YOUR TAX RETURN THROUGH A PROFESSIONAL TAX ACCOUNTANT THIS YEAR AND SEE THE BIG DIFFERENCE !**

**Minimise your time and effort and let us Maximise your Eligible Refund !!**

Vision with precision

PAS

**Shop 7, 7 Joyce Street, Pendle Hill T : 05 8626 0008**

**Suite 4, Level 1, 112 Main Street, blacktown**

**Lanka T 02 9671 4440 M 0413 248 864**

**Mon - Fri**
**9.30am to 5.30pm**
**WEEKENDS & AFTER HOURS BY APPOINTMENT ONLY**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# VEE CAR SALES
## PTY LTD

★ Warranty available
Finance available ★

Compare Our Prices

Toyota ◆
Ford ◆
Holden ◆
Mitsubishi ◆
Nissan ◆
Subaru ◆
Honda ◆

## QUALITY USED CARS

Get a car that suits your needs

**Raj** (B. Bus)
**0450 050 585**
155 Great Western Hwy
Mays Hill NSW 2145
Lic: MD 038409











# PARISH PATIENCE
## IMMIGRATION SERVICES

FOUNDED 1888

MIA
Member of Migration Institute of Australia

IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST

Our large legal team provides a full range of specialised immigration legal services no matter where you are in the world at competitive rates

Our professionals provide expert assistance with:

- Onshore & offshore applications
- Temporary & permanent residence
- Skilled, employment & business
- Students, visitors, holidaymakers
- Family, partner & spouse
- Sportspersons & distinguished talent
- Refugees & asylum seekers
- Business & investment visas
- Visa cancellations, detention & deportation
- Health or character matters
- Migration Review Tribunal (MRT)
- Refugee Review Tribunal (RRT)
- Administrative Appeals Tribunal (AAT)
- Appeals to Federal Magistrates Court, Federal Court & High Court
- Citizenship, resident return visa
- Skillselect, EOI
- State sponsorships and nomination
- All other visas & immigration related matters

We also provide a full range of non-immigration legal assistance including commercial, criminal, litigation, wills, estate and conveyancing.

If anyone in Australia or overseas requires assistance please contact us directly as we do not use agents overseas

David Bitel, Managing Partner
Accredited Specialist in Immigration Law
MARN 9255523
E-mail: dbitel@ppilaw.com.au

Michael Jones, Solicitor
Accredited Specialist in Immigration Law
MARN 9255530
E-mail: mjones@ppilaw.com.au

Mahalingam Sutharshan (Shan)
LLM (Monash), LLM (ANU)
MARN 0961664
E-mail: shan@ppilaw.com.au

For more information or to book an appointment please contact: Mal Wickramasinghe
E-mail: malinw@ppilaw.com.au

Level 1, 338 Pitt Street, Sydney NSW 2000 | Tel (02) 9286 8700 | Fax (02) 92833323 |
Web: www.ppilaw.com.au | E-mail: ppmail@ppilaw.com.au



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOUR TRUST REMAINS OUR BEST REWARD.




DAIRY INDUSTRY ASSOCIATION
OF AUSTRALIA – 2014 - **SILVER MEDAL**
**Sharma's Kitchen Paneer**
**Masala Paneer, Mango Lassi**
**Badam Milk and Ghee**

ROYAL AGRICULTURE SOCIETY
OF NSW – 2014 - **SILVER MEDAL**
**Sharma's Kitchen Ghee, Milk Badam**
**Khoya Barfi, Paneer and Yoghurt**
**GOLD MEDAL - Mango Lassi**







## SHARMA'S KITCHEN

**For trade or any other enquiries, please contact**
**Phone: 02-9476 2323 • Fax: 02-9476 3454**
**info@sharmaskitchen.com.au**

**sharmaskitchen.com.au**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருக்குறள் சிந்தனை

**அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா**
**மானம் உடையது அரசு (384)**

தெளிவுரை : அறநெறியில் தவறாததும், அறமல்லாதவற்றை விலக்கியும் வீரம் நீங்கா மானமும் உடையதே அரசு ஆகும்.

# தேர்தலோ தேர்தல்...

-மாத்தளை சோமுவின் திருக்குறள்
அறிவியல் அகலவுரை நூலிலிருந்து

உலகிலேயே ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் எனப் பல தேர்தல்கள் நடக்கும் நாடாக இருக்கும் இலங்கையில் 2016இல் ஜனாதிபதி தேர்தல் நடக்கயிருக்கிறது. இப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபால என்பவர் போட்டியிடுகிறார். அவரை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் ராணுவ தளபதி சரத்பொன்சேகா ஆகியோரும் ஏனையோரும் இணைந்தே தெரிவு செய்திருக்கிறார்கள். ஆயினும் அவர் நேற்றுவரை ராசபக்ஸவின் மந்திரி சபையில் இருந்தவர், வடமத்திய மாகாணத்தில் செல்வாக்கு மிக்கவர். ராசபக்ஸவைப்போல் பிரபலமானவர் அல்ல. ஆயினும் சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி முறையை மாற்றி மறுபடியும் பிரதமர் தலைமையிலான அதிகாரத்தைக் கொண்டு வரவும், ராசபக்ஸவின் குடும்ப ஆதிக்கத்தை ஒழிக்கவும் அந்தக் கூட்டணி உருவாகியிருக்கிறது. இந்தக் கூட்டணியில் பிரதான தமிழர், இஸ்லாமியர் கட்சிகள் இணையவில்லை. தேர்தல் ஆய்வாளர்களின் ஆய்வுபடி பொது வேட்பாளருக்கு ஐ.தே.கட்சி, சந்திரிகா குமாரதுங்கா கட்சி சரத்பொன்சேகா கட்சி என்பனவற்றின் வாக்குகள் மற்றும் வடகிழக்கு, மலையகத் தமிழ் மக்கள், இஸ்லாமியர்கள் வாக்குகள் கிடைத்தாலே வெற்றி நிச்சயம் எனத் தெரிகிறது. ஆனால் மைத்திரிபாலாவின் 'இதுபௌத்தநாடு, அதிகாரப் பரவல் இல்லை' போன்ற பேச்சுகள் சிறுபான்மை இன மக்கள் வாக்களிக்க தடையாக இருக்கலாம். எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளரை நிறுத்தியதே தமிழர், இஸ்லாமியர் பிரச்னை தீர்வுகான அன்று. சர்வ வல்லமை படைத்த ஜனாதிபதி அதிகாரத்தை உடைக்கவே ஆகும். ஆனாலும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவும், பணபலமும், அதிகாரமையமும் விரிந்திருக்கிற குடும்ப ஆதிக்கமும் தேர்தலில் பொது வேட்பாளர் வெற்றி பெறுவாரா என்பது உறுதியாக சொல்ல முடியாதது. இலங்கை தேர்தல் வரலாற்றிலே வரலாறு காணாத பின்னணி கொண்ட தேர்தலாக இது இருக்கலாம். அதே நேரத்தில் இந்த தேர்தலில் எவர் வென்றாலும் இனப்பிரச்னைக்கு முடிவு காணப்படும் என்பதற்கான அறிகுறிகளே தெரியவில்லை. இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்பதை மறுத்து ஓரினமக்கள் வாழும் நாடு என்று சொல்லும்வரை சிறுபான்மை மக்களின் அவலங்கள் தொடரும். அதுவரை எந்த தேர்தலும் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமின்றி மலையக, இஸ்லாமிய மக்களுக்கும் விடிவைத் தராது.

**- மாத்தளை சோமு**
**ஆசிரியர்**

மலர் : 7
இதழ் : 5
டிசம்பர் 2014

**அனைவருக்கும் கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரியதாகட்டும்.**

அஞ்சப்பர் உணவகத்தின் புதிய கேட்ரிங் சர்வீஸ் ஆரம்பம்



ANJAPPAR
Chettinad Indian Restaurant
Australia



Anjappar starrts their new catering service wings



1st YEAR ANNIVERSARY ANJAPPAR SYDNEY
GOLDEN JUBILEE YEAR 1964 TO 2014
GRAND FOOD FESTIVAL AT ANJAPPAR RESTAURANT

பிரபல செட்டிநாடு சைவ, அசைவ உணவகமான அஞ்சப்பர் செட்டிநாடு உணவகம் சிட்னியில் தமது கேட்ரிங் சர்வீஸ் வசதியை அறிமுகம் செய்துள்ளது. 20 நபர் முதல் எவ்வளவு பேருக்கும் தேவையான உணவு வகைகளை தயார் செய்து அவர்கள் கேட்கும் இடத்திலேயே தமது ஆட்களைக் கொண்டே பரிமாற தயார் ஆக இருக்கிறோம்.

பிறந்தநாள், மஞ்சள் நீராட்டு, வளைகாப்பு, திருமணம் போன்ற அனைத்து சுப நிகழ்ச்சிகளுக்கும் தேவையான பிரத்தியேக சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை சிறந்த முறையில் அனைவருக்கும் ஏற்ற விலையில் வழங்குகிறது. மண் மணம் மாறாத அதே இந்திய தமிழக சுவையை சுடச்சுட சிட்னியில் சுவைத்து மகிழ்ந்திட இல்ல விழாவினைச் சிறப்பித்திட அஞ்சப்பர் வாருங்கள்.

வாருங்கள் வரவேற்கிறோம்!! வாழ்த்துங்கள் வளர்கிறோம்!!!

Now we have started our new catering service with the support of fully equipped team from india. Any number, any item, any where is the slogan for Anjappar catering service.

WE CAN SERVE ANY FUNCTION LIKE BIRTHDAY, BABY SHOWERING,MARRIAGE,ENGAGEMENT AND all other events in the houses and offices with our set menu or your customized menu with attractively reasonable and affordable price.

104 Church Street, Paramatta NSW 2150 PH: 02 96333247 / 0452377739

Branches: INDIA CANADA SINGAPORE USA UK UAE KUWAIT QATAR MALASIA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தகவல் பெட்டி

### பாவேந்தரும் நகைச்சுவையும்

ஆலமரத்தில் அமர்ந்துள்ள குரங்கொன்று கிளையினில் தொங்கும் பாம்பினை விழுதென எண்ணி அதனைத் தொடப் பாம்பு சீறுகின்றது. விளக்கினை அறியாது தொட்ட பிள்ளை அலறி



ஓடுவதைப் போல் குரங்கிம் தாவிக் குதித்து ஓடி ஏனைய விழுதுகளையெல்லாம் பாம்பென எண்ணி மரத்தின் உச்சிக்குச் சென்றுவிடுகின்றது. அங்கு சென்ற பின்பும் அதன் அச்சம் தணிகிறது? இல்லை தனது வாலையும் கண்டு பாம்போ விழுதோவென ஐயம் கொள்ளுகின்றது அழகின் சிரிப்பு கவிஞரது பாடல்களில் ஏனைய சுவைகளுடன் நகைச்சுவையும் விரவியிருத்தலைக் காணலாம்.

### கவிமணியும் நகைச்சுவையும்

மலரும் மாலையும் ஆசிய ஜோதி முதலான அரிய கவிதை நூல்களைப் பாடிய கவிமணி தேசியவிநாயகம் பிள்ளையவர்கள்



நாஞ்சில் நாட்டு மக்கள் வாழ்க்கையினை மருமக்கள் வழி மான்மியம் என்னும் நூலில் அழகுற விளக்குகின்றார். இந்நூலின்கண் நீதிமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் அங்கு வாங்கப்படும் பீசு குறித்தும் நகைச்சுவை தோன்றக் கூறுதலைக் காணுங்கள்.

**கோர்ட்டுப் பீசு குமாஸ்தாப் பீசு**
**கூடிக் காப்பி குடிக்கப் பீசு**
**வக்கீல் பீசு மகமைப் பீசு**
**வக்காலத்து வைக்கொடு பீசு**
**கண்டு பீசு காணாப் பீசு**

இப்படியாக என்றென்றைக்கும் பீசு பீசாகப் பிச்சுப் பிடுங்கும்.

### வேதநாயகரின் நகைச்சுவை

நீதிமன்றத்தில் நீதிபதியாக வேலைபார்த்த வேதநாயகம் பிள்ளையவர்கள் கவிதைப்பாடுவதிலும் வல்லராயிருந்தார். சர்வ சமய சமரசக் கீர்த்தனை என்னம் நூல் இவர் பாடி கீர்த்தனைகள் அடங்கிய ஒன்றாகும்.

இளமையில் அறஞ்செய்யாது பொருளைச் சேர்த்து வைத்து முதுமையில் உயிர்ப்பிரியும் நிலையில் கிடந்த ஒருவன் அறஞ்செய்ய விரும்பியதனை வேதநாயகர் கூறுவது போன்று சீவக சிந்தாமணியும் எடுத்துரைக்கின்றது. படுக்கையில் கிடந்த ஒருவன் தன் மனைவியினிடத்துத் தான் தேடிய



பொருளைக் கையினால் அளவு காட்டிப் பிறருக்கு எடுத்தளிக்குமாறு ஏவினான். வாய் திறந்து பேசவும் இயலாத நிலையில் இருக்கும் அவன் இவ்வாறு கையால் குறிப்புக் காட்டினான். அவனது குறிப்பினை உணர்ந்த மனையாளோ தான் ஒன்றும் அறியாதவள் போன்று நடித்து விளாம்பழம் கேட்கின்றீர். அஃது உமது உடலுக்கு ஆகாது எனக்கூறி அவனது கருத்தை மறைத்து விடுகின்றாள்.

**கையால் பொதித்துணையே காட்டக்**
**கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்**
**ஐயா விளம்பழமே என்கின்றீர்**
**ஆங்கதற்குப் பருவம் அன்றுஎன்**
**செய்கோ எனச் சிறந்தாள் போற்சிறவாக்**
**கட்டுரையால் குறித்த எல்லாம்**
**பொய்யே பொருளுரையாம் முன்னே**
**கொடுத்துண்டல் புரியின் கண்டீர்**

### அந்நிய மொழியில் தமிழர்

இந்தி தமிழை அழித்து விடும் என ஓயாமல் பிரசாரம் செய்யப்பட்டது. அந்தக் கண்ணோட்டத்திலேயே இந்தி எதிர்ப்பு போராட்டம் தமிழகத்தில் நடந்தது. ஆனால் இன்றைய நிலைமை என்ன என்று யோசித்துப் பாருங்கள் இந்தியா தமிழை அழித்துக் கொண்டிருக்கிறது?



அல்ல... ஆங்கிலம் வேக வேகமாகத் தமிழை அழித்துக் கொண்டிருக்கிறது. நாம் முன்னரே இந்தி கற்றிருந்தால் இப்போது வட இந்திய அரசியலில் மதிப்பு மிக்கவர்களாக இருந்திருக்கலாம். ஆங்கிலம் இந்தளவிற்கு பரவியிருக்காது. இப்போது தாய் மொழியும் போய் தேசிய மொழியும் போய் அந்நிய மொழி ஆதிக்கத்தில் இருக்கிறோம்.

சொனனவர் பேராசிரியர் **சாலமன் பாப்பையா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cheapest Airfares Guarantee

# 24/7

Call us anytime, any day...

# No One Does It Cheaper

GUARANTEE
FIND IT CHEAPER &
WE WILL BEAT IT BY
50%*

Offering the Guarantee for over 18 years

| Melbourne | Blacktown | Parramatta | Burwood |
|---|---|---|---|
| Shop 4 Emirates House<br>257 Collins Street<br>Melbourne VIC 3000<br>Ph: 03 9981 1400 | 16 Flushcombe Road<br>Blacktown 2148<br>Ph: 02 9830 1600 | Shop 4, 186 Church Street<br>Parramatta NSW 2150<br>Ph: 02 9407 2300 | 2/98 Burwood Rd<br>Burwood NSW 2134<br>Ph: 02 8583 0100 |

**Best & Less Travel**
Cheapest Airfares Guaranteed


**1300 GO BEST**
1300 46 2378

www.bestandlesstravel.com.au

*Cheapest Airfare Guarantee terms and conditions can be found on bestandlesstravel.com.au/guarantee.

Best & Less Travel Pty Ltd © 2011 All Rights Reserved | License No: 2TA4244 | IATA No: 02-360186 | ABN: 33 070 559 456.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jai Hanuman Astrological Centre

## World Famous Indian Astrologer
## PANDITH SANJEEV JI



100% RESULTS



100% RESULTS




**Are you disappointed meeting Indian Astrologer?**

**100% GUARANTEE SOLUTIONS ON:**

- Relationship problem,
- Depression & Stress,
- Family Arguments,
- Mis-understanding,
- Worried About Loved One,
- Looking for Job,
- Unhappy in Love Life,
- Financial Problem,
- Your Love Back,
- Childless Couples,

Destroy your problem before they destroy you.

He solves problem related to Love, Relationship, happiness, Money, Family arguments, Husband wife problem, getting your lover back, removal of black magic, evil spirits, Voodoo, witchcraft, jaadoo etc...



Nobody can break my work, no-one can do work before me, it's my challenge

100% GUARANTEE

**DANGEROUS BLACK MAGIC REMOVING**

Open 7 Days Call for Appointment

**0426 411 133**
**0405 959 672**

4/130 Pendle Way,
Pendle Hill
NSW 2145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்திரை அரசி ராதிகா

தைரியமான பெண்களை எனக்கு மிகவும் பிடிக்கும். வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள் யாருக்குத் தான் இல்லை? கஷ்டங்களும் துன்பங்களும் சோதனைகளும் நம் முன்னே முட்டுக் கட்டைகளாக வந்து விழும் போது நம்மில் பலர் இடிந்து போகிறோம். வாழ்வு அத்துடன் அஸ்தமித்து விடுவதாக எண்ணி அடுத்த அடி எடுத்து வைக்க மறுக்கிறோம். ஆனால் இந்த முட்டுக் கட்டைகளைத் தூசென மதித்து அவற்றை தகர்த்தெறிந்துவிட்டு யாரெல்லாம் முன்னேறுகிறார்களோ அவர்களே வாழ்வில் சாதனை படைக்கிறார்கள். இவர்களது உயிர் மூச்சாக இருப்பது-- தன்னம்பிக்கை, முயற்சி. பெண்கள் தமது திறமைகளைப் பல துறைகளில் நிரூபித்துக் கொடி கட்டிப் பறக்கிறார்கள். இதைப் பார்த்து நாம் பெருமைப்பட வேண்டாமா?

பெண்கள் முன்னோடிகளாக இருப்பது, சிறந்த திறமைசாலிகளாக வழிகாட்டிகளாக இருப்பது ஒரு குடும்பத்தையே முன்னேற்றப் பாதையில் நிச்சயம் கொண்டு செல்லும். மற்றைய தொழில் துறைகளைப் போலத் திரைப்படத்துறையும் ஒருதொழில்துறை. இந்தத் துறைக்குப் பலர் வருகிறார்கள், போகிறார்கள். பெயரோடும் புகழோடும் சோபித்து நிற்பவர்கள் எத்தனை பேர்? சினிமா உலகில் சிறந்த நடிகையாகத் தனக்கென ஒரு தனியிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது மட்டுமில்லாமல் திரைப்படத் தயாரிப்பாளராகவும் முத்திரை பதித்து விட்டவர் நடிகை ராதிகா. வெள்ளித்திரையுடன் இவரது ஆட்சி நின்றுவிடவில்லை.சின்னத்திரை நோக்கியும் பரந்து விரிந்தது. சித்தியிலிருந்து வாணி ராணி வரை தொடர்ந்து பல தொலைக் காட்சித் தொடர்களைத்தயாரித்ததும் அல்லாமல், அனைத்துத் தொடர்களிலும் பிரதம கதாபாத்திரங்களில் இன்று வரை நடித்துக் கொண்டிருக்கும் ராதிகாவின் திறமையும் வளர்ச்சியும் நம்மை வியக்க வைக்கிறது.



தனது 16 ஆவது வயதில் பாரதிராஜாவின் அறிமுகத்தில்

கிழக்கே போகும் இரயிலில் மழலைத் தமிழ் பேசிய ராதிகாவா இவர் என்று, இன்று அவர் பேசும் தமிழும் அவரது நடிப்பும் எண்ணத் தூண்டுகிறது. சிப்பிக்குள் முத்து, பவித்ரா, கிழக்குச்சீமையிலே, கேளடி கண்மணி, பாசப் பறவைகள் போன்றவை இவரது முத்திரை பதித்த திரைப்படங்கள். பேர் சொல்லும் பிள்ளையில் இவரது நகைச்சுவை நடிப்பும் என்னை மிகவும் கவர்ந்தது. நடிப்போடு மட்டும் நின்றுவிடாமல் தயாரிப்புத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். ராடான் எனும் பிரபல தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்கினார். இந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் இன்று சின்னத்திரையையே ஆட்சி செய்ய, சின்னத்திரையின் அரசி யாகவே வலம் வருகிறார் ராதிகா.

நடிகை ராதிகா எங்கள் குடும்பத்துக்கு அறிமுகமானது சிங்கப்பூரில் வாழும் அழகுக்கலை நிபுணர் திருமதி விஜயராணி லாரன்ஸ் மூலமாகத்தான். இவர் எனக்கு உற்ற சகோதரி போன்றவர். அடிக்கடி அவஸ்திரேலியா வருவார் நம்மோடு தங்குவார். ஒரு தடவை இவர் தன்னுடன் அழைத்து வந்தது திருமதி ராதிகாவின் தாயார் கீதாராதா

அவர்களைத்தான். இவரை நான் கீதா அக்கா என்றுதான் அன்புடன் அழைப்பேன். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் கீதா அக்கா. எங்களுடன் அவர் தங்கியிருந்த சில நாட்களிலேயே எங்கள் குடும்பத்தில் எல்லோர் மனதையும் கவர்ந்தவராக மிகவும் நெருக்கமாகி விட்டார். எங்கள் நட்பு இன்றுவரை தொடர்கிறது. நாம் சென்னை செல்லும் போது கீதா அக்காவைப் பார்க்கத் தவறுவதில்லை. மிக அன்போடும் பாசத்தோடும் எங்களைப் பராமரிப்பவர். கீதாஅக்கா இல்லத்தில்தான் ஒருதடவை ராதிகா அவர்களைச் சந்தித்தேன். ராதிகாவை நான் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் பார்த்திருக்கிறேன், ஆனால் பேசுவதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை.



பேர் சொல்லும் பிள்ளை படப்பிடிப்பு ஏவிஎம் ஸ்டுடியோவில் நடைபெற்ற போது திரு. கமலஹாசன் அவர்களை நாம் சந்திக்கச் சென்றிருந்தோம். அப்போது இவர் அங்கு படப்பிடிப்பில் இருந்ததால் பேச இயலவில்லை. பின்னர் ஒரு தடவை சிங்கப் ரில் திருமதி விஜயராணி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு விழாவுக்கு ராதிகா,ஸ்ரீபிரியா அனைவரும் வருகை தந்திருந்தார்கள். அப்போதும் கூட மேடையில் அவர்கள் இருந்ததால் பேசுவதற்கான சந்தர்ப்பம் இல்லை. கீதா அக்காவின் இல்லத்தில் அவரைப் பார்த்த போதுதான் நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமானோம். திருமதி. ராதிகா, திருமதி. நிரோஷா மற்றும் அவரது சகோதரர்கள் மோகன்,ராஜு எல்லோரும் வீட்டில் கூடுகின்ற வேளைகளில் நாம் சென்னையில் இருந்தால், எங்கள் குடும்பத்தினரையும் நிச்சயமாக அழைப்பார் கீதா அக்கா. தன் கணவர் எம். ஆர். ராதா அவர்கள் பற்றி நம்முடன் நிறையப் பேசுவார். தமது இலங்கை வாழ்க்கை, லண்டன் வாழ்க்கை அநுபவங்கள் எனச் சகல விஷயங்கள் பற்றியும் பேசுவார்.

சமையலில் கீதா அக்காவுக்கு நிறைய ஆர்வம் உண்டு கேக் வகைகள், சிற்றுண்டி வகைகள் செய்முறைகள் பற்றியும் அளவளாவுவோம். தாயாரைப் போலவே ராதிகாவும் சமையலில் நிறைய ஆர்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவார்.தம் குடும்பத்தினருக்கு விதம் விதமாகச் சமைத்துப் பரிமாறுவதில் இவருக்கும் தனி இன்பம். இவரது மகன் ராகுலின் பிறந்த தினத்தின் போது இவரது சமையலை சுவைத்த அநுபவமும் எனக்குண்டு.

ராதிகா அவர்களது இல்லத்துக்குச் சென்றபோது திரு. சரத் குமார் அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. ஏதோ அதிக நாட்கள் நம்மோடு பழகியவர் போல மிக இயல்பாகவும் சிநேக பாவத்துடனும் அவர் நம்மோடு பழகியது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அழகிய குடும்பத்தையும் கட்டிக் காத்து, ராடான் எனும் பெரியதொரு நிறுவனத்தையும் கட்டிக்காத்து முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் திருமதி. ராதிகா சரத்குமார், தனது வெற்றிக்கு ஆரம்பத்தி

லிருந்து இன்றுவரை தனது தாயார் கீதாராதா அவர்கள்தான் உறுதுணையாக இருந்த வந்திருக்கிறார் எனக் கூறுகிறார்.தாம் நடிக்க வந்ததே ஒரு எதிர் பாராத விடயம் என்பதனையும் ஒப்புக் கொள்கிறார்.. ராதிகாவின்

தங்கை நிரோஷா தான் சிறு வயதிலிருந்தே நடனம், நடிப்பு ஆகியவற்றில் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்ததாகவும், நிரோஷாதான் நடிகையாவார் என்று குடும்பத்தினர் எதிர் பார்த்ததாகவும் கூறுகிறார்.

எது எப்படியானாலும் கம்பன் வீட்டுக் கட்டுத்தறி கவி பாடியாக வேண்டும். எம். ஆர். ராதா எனும் நிகரில்லா கலைஞரின் தொடர்ச்சிதான் ராதிகா எனும் இந்த அற்புத நடிகை என்பதில் என்ன சந்தேகம்? சித்தியிலிருந்து வாணிராணிவரை இவரதுதொலைக்காட்சித் தொடர்களைத் தொடர்ந்து பார்த்து வருகிறேன். சித்தி தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் வெள்ளிக் கிழமை எபிசோடைப் பார்த்தவர்கள் திங்கள் வரை காத்திருப்பதற்கு பொறுமையில்லாமல் தவிப்பதையும் பார்த்திருக்கிறேன். அதேநிலைமை இவரது வாணிராணி

இன்று ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு தொலைக் காட்சித் தொடரில் ஒரு கதாபாத்திரத்தில் தொடர்ந்து நடிப்பது

என்பதே கடினமான விடயம். அதிலே இரட்டை வேடமெனும் போது அது எத்தனை சிரமமான விடயம் என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இரண்டு வித் தியாசமான கதா பாத்திரங்களின் நடை,உடை,பாவனை அனைத்தையும் வித்தியாசப்படுத்தி நடிப்பது என்பது சுலபமல்ல.. ஒரு மூன்று மணி நேர திரைப்படமாக இருந்தால் ஒருகால எல்லைக்குள் இந்தக் கதாபாத்திரங்களுக்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டு நடித்து முடித்துக் கொடுத்து விடுவது ஓரளவு சிரமம் குறைந்த வேலைதான். ஆனால் தொடர்ந்து பல வாரங்கள், சில வருடங்கள் என இந்தப் பாத்திரப் படைப்புகளுக்கு ஏற்ற வகையிலே தொடர்ந்து நடிப்பது என்பது சாதாரணமாக எல்லோராலும் ஆகக்கூடிய விடயம் அல்ல. இதற்கு அசாத்திய திறமை வேண்டும். வாணிராணிதொடர் ராதிகாவின் நடிப்புப் பயணத்தில் நிச்சயமாக ஒரு பெரிய மைல்கல்.

அண்மையில் இவரது திறமைக்குச் சான்று பகர்வது போல் பல விருதுகள் இவரைத் தேடி வந்திருக்கின்றன. அவற்றுள் குறிப்பிட வேண்டியவை சன் தொலைக்காட்சியின் சிறந்த கதா நாயகி விருது, தங்க மங்கை விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது என இன்னும் பல விருதுகள்.

சித்தி, அண்ணாமலை, அரசி,செல்லமே, வாணிராணி எனத் தொடர்ச்சியாக வெற்றித் தொலைக்காட்சித் தொடர்களை வழங்கி வரும் அதே வேளையில் திரைப்படத்தயாரிப்பு திரைப்படத்தில் நடிப்பது ஆகியவையும் தொடர்கின்றன. இவரது வெற்றிகரமான இந்தப்பயணம் தொடர்ந்து மேலும்

பல வெற்றிகளை குவிப்பதாக அமையவேண்டும் என உளமாற வாழ்த்துக்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு ஊழியம் செய்த எஸ்.பொ.

**மாத்தளை சோமு.**

எழுத்திலும் பேச்சிலும் அதிர்வலைகளை ஏற்படுத்திய எழுத்தாளர் எஸ்.பொ.வை முதன் முதலில் மாத்தளையில் நடந்த சிவராத்திரி விழாவில் சந்தித்தேன். அவ் விழாவின் செயலாளராக இருந்த போதும் எஸ்.பொ.வை தொடர்பு கொண்டு, சிறப்பு பேச்சாளராக அழைத்து வந்தவர் எழுத்தாளர் மாத்தளை க. கார்த்திகேசு. விழாவில் எஸ்.பொ.வை இரவு ஒரு மணியைப்போல் பேச அழைத்தேன். கம்பீரமான குரலில், கையில் குறிப்பேதும் இல்லாமல் அவர் தன் ஆன்மீகப் பேச்சைத் தொடங்கினார். பேசத் தொடங்கிய கொஞ்ச நேரத்திலேயே சிவனின் தலையில் உள்ள பிறை, கையில் உள்ள சூலாயுதம் ஆகிய சின்னங்களைப் பிற சமய சின்னங்களோடு ஒப்பிட்டு பேசத் தொடங்கினார். எனக்கு 'திக்' கென்றது.. மாத்தளை பல சமயத்தவர்களும் வாழும் ஊர். கோயிலுக்குப் பக்கத்திலேயே அவர்கள் இருக்கிறார்கள். எஸ். பொ.வின் பேச்சால் பிரச்னை வருமோ என்ற எண்ணத்தில் கோயிலுக்கு வெளியே உள்ள ஒலி பெருக்கிகளை மௌனியாக்க வைத்தேன் எஸ்.பொ.வுக்கு அது தெரியாது. அவர் ஆழ்ந்த சமய ஞானியைப் போல் பேசி கோயிலுக்குள் தூங்கி விழுந்தவர்களையும் விழிக்கவைத்தார். எஸ். பொ. எந்த மேடையானாலும், எவர் மேடையில் இருந்தாலும், தன் கருத்துக்களை மற்றவர்களால் ஏற்க முடியுமோ, முடியாதோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் துணிவுடன் பேசுவார். அவரின் பேச்சில் காரமும், இலக்கிய சாரமும் இருக்கும். சிறுகதை, நாவல், கட்டுரை என்பனவற்றில் புதுமையைக் கையாண்ட அவர் மேடையை தனது இலக்கியப் பயணத்திற்காகப் பயன்படுத்தினார். அவரால் இலக்கிய மேடைகளில் கருத்து மோதல்கள் உருவாகின. முற்போக்கு இலக்கியம் என்ற இலக்கை எழுத்தாளர்கள், பேராசிரியர்கள் முன்னெடுத்தபோது அதனை எதிர்த்து 'முற்போக்கு ஒரு முடக்கு போக்கு நற்போக்கு இலக்கியமே நாட்டுக்குத் தேவை' என இலக்கியப் போர் தொடுத்தார். அவரின் இந்தப் போரை எதிர்த்து பல முற்போக்கு இலக்கியவாதிகள் போரிட்டனர். இது குறித்த கருத்துப்போர் வார, மாத இதழ்களில் கட்டுரைகளாக விரிந்தன. ஆனாலும் எஸ்.பொ. விடவில்லை. நற்போக்கு இலக்கியம் குறித்து ஒரு நூலே எழுதினார்.



மாத்தளையில் நேரில் பார்த்த எஸ்.பொ.வோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. பொதுவாக இலக்கியக் கூட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடந்து வந்ததால் அவற்றில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு வாய்க்கவில்லை. ஆனாலும் கொழும்பில் இருந்து எம்.ஏ.ரகுமான் இளம்பிறை சார்பாக வெளியிட்ட எஸ்.பொ.வின் நூல்களைத் தொடர்ந்து வாங்கிப் படித்து எஸ்.பொ.வின் எழுத்து ஆளுமையை வியந்தேன். பரபரப்பாகப் பேசப்பட்ட 'சடங்கு' நாவல் அவரின் எழுத்தை மட்டுமின்றி கதைக் கருவையும் புதிய தளத்திற்கு கொண்டு சென்றது.

அந்நாவல் குறித்து கிழக்கு மாகாணம் தந்த எழுத்துச் சிற்பி வ.அ.ராசரத்தினம் 'இன்றைக்குப் பொறுந்துமாப் போல் மனிதனை ஆட்டிப்படைக்கும் இருபெரும் சக்திகளாகிய பசியையும், காமத்தையும் அவைகளிலே பின்னதை ஊடுபாவாகக் கொண்டு யாழ்ப்பாண வாழ்க்கையைச் சடங்கில் நெய்திருக்கிறார் ஆசிரியர். யதார்த்தம் பேசுபவருக்கு நான் நிச்சயமாக ஒன்று சொல்வேன். இன்னும் நூறாண்டு காலத்தில் நமது வாழ்க்கை நிலைகள் மாற்றமடையலாம். அப்பொழுது நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஒரு யாழ்ப்பாணத்தான் எப்படி வாழ்ந்தான் என்று அறிய விரும்பும் சரித்திர மாணவன் ஒருவன் நிச்சயமாக எஸ்.பொவின் 'சடங்கை' படித்தே ஆகவேண்டும்' என்று எழுதினார்.

சுதந்திரன் வார இதழில் தொடராக வந்த 'சடங்கு' நாவலை அரசு வெளியீடாக இளம்பிறை ரகுமான் புதிய வடிவத்தில் வெளியிட்டு புதுமை செய்தார். இவ்வாறே தேர்,தீ,வீ, என்பன வெளிவந்து இலக்கிய உலகை உலுக்கின.

காலம் ஓடியது. அரசியல் காட்சிகள் ஈழத்தில் மாறின. 83 இனக் கலவரத்தின் பின் தமிழகத்தில் தங்கியிருந்த நான் முடிவாக அவுஸ்திரேலியாவில் கால் பதித்தேன். இலக்கிய மூச்சு சிறுத்து வாழ்க்கை மூச்சு பெறுத்து நின்ற காலம். கைபேசியோ கணினியோ இல்லாத வாழ்க்கை. புலம் பெயர்ந்து முகவரி தேடிய நேரம். ஒரு நாள் தொலைபேசியில் 'சிட்னியில் இருக்கிறேன் சந்திக்க வேண்டும்' என்று எஸ்.பொ. சொன்னார். அழைத்தேன் வந்தார். அவரோடு, நடக்கும் யுத்தத்தில் தமிழரின் நிலங்களின் முகம் சிதைவுற்றதைப் பற்றிப் பேசினோம். அப்போது தாங்கள் எதுவும் எழுதவில்லையே என்ற என்னுடைய ஆதங்கத்தை வெளியிட்டேன். அவர் யோசித்தார். அப்போது நான் அவரிடம் நீங்கள் சிறுவனாக, இளைஞனாக இருந்தபோது பார்த்த யாழப்பாணத்தைப் பற்றி கட்டுரைகள் எழுதுங்களேன் என அடியெடுத்து கொடுத்தேன். அதற்கு அவர் சில இடங்களுக்குப் போய் வந்துதான் எழுதவேண்டும்' என்றார். நான் உடனே 'இப்போது யுத்தம் நடக்கிறது அங்குபோய் பார்த்து எழுத முடியாது. நினைவில் உள்ளதை மீளப் பதித்து எழுதுங்கள் என்று சொல்ல பிறகு அவர் சொல்ல நொல்ல நான் அதனை எழுதினேன். அது ஏழு ஞாயிறு காலை முதல் மாலை வரை தொடர்ந்தது. அவர் சொல்லச் சொல்ல எழுதியது எனக்குப் புதிய அனுபவம். பிறகு அக்கட்டுரைகள் விரிவு பெற்று மெல்பேர்ணிலிருந்து வந்த 'மரபு' என்ற இதழில் வெளியானது. அது பிற நனவிடை தோய்தல் என்ற பெயரில் நூலானது.

1992இல் சிட்னியில் நடந்த பாரதியார் விழாவில் எஸ்.பொ.வை பேச அழைத்தேன். (அதுதான் அவர் சிட்னியில் அவுஸ்திரேலியாவில் பேசிய முதல் மேடை) விழாவில் 'புலம்பெயர்ந்த தமிழன்தான் தமிழை தலைமை தாங்கிக் கொண்டு செல்வான் என்றும், யாழ்ப்பாணத்து தமிழே முன்னிற்கும் என்று பேச தமிழகத்து நண்பர்கள் என்னோடு வாக்குவாதம் செய்தார்கள். நான் அது அவரின் கருத்து வேறு மேடையில் அதனை மறுத்துக் கொள்ளுங்கள் என்றேன். அதற்குப் பிறகு இங்கு பல மேடையில் அவரின் பேச்சைக் கேட்டேன். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் பேச்சில் மாத்தளையில் முதன்முதலில் கேட்ட காரம் சற்றும் குறையவில்லை. எழுத்தை ஆயுதமாக்கிய எஸ்.பொ. பேச்சையும் ஆயுதமாக்கினார்.

ஈழத்தில் ஆயுதப் போராட்டம் நடந்தபோது அவர் 'பதுங்காது' அல்லது அஞ்ஞான வாசம் செய்யாது துணிந்து பேசி தன் பேச்சை ஆயுதமாக்கினார். அவரின் பேச்சு, மூச்சு காற்றில் கலந்து நிற்கின்றன. ஆனால் அவரின் எழுத்துகள் ஆயுதங்களாக அடுத்த தலைமுறைக்கும் உதவும் நூல்களாக இருக்கின்றன. சடங்கு என்ற நாவலைப் படித்துவிட்டு 'எஸ். பொ. ஒரு கேமிராவைத் தூக்கி கொண்டு யாழ்ப்பாணம் சென்றிருக்கிறார் போல் தோன்றுகிறது. சடங்கிலே அவர் விவரிக்கும் காட்சிகள் புகைப்படங்களைப் போன்று மிக தெளிவானவை' என்று ஒரு வாசகன் சொன்னது சரியானது. 'தீ' என்ற நாவல் குறித்து விலைமாதிடம் ஏற்படும் அனுபவம் பாலுணர்வின் எல்லைப் புள்ளி எது என்று அவனுக்குச் சுட்டிக் காட்டிவிடுகிறது. இன்று இந்நாவலை எஸ்.பொ. எழுதினாலும் வேறு மாதிரியாக எழுதியிருக்க முடியாது. இதுதான் அவர் எழுத்தின் சத்திய ஆவேசம். வேஷம் தரித்து எழுதுவதென்பது அவரால் இயலாத காரியம். முகமூடிகள் அணிவது அவர் எழுத்தின் பண்புக்கு முரணிய செயல்...' என்று பிரபல எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி சொன்னது மிகச்சரியானது.

ஆனாலும் அவர் கதைகளில் பாலுணர்வு அதிகம் என்ற கருத்தினைச் சிலர் முன் வைக்கின்றனர். சங்ககால இலக்கியங்களிலே பாலுணர்வு கவிதைகள் இருக்கின்றன. பாலுணர்வு என்பது மனிதரோடு சேர்ந்தே வருவது உயிரினங்களோடு ஊடுருவி நிற்பது. மேலும் இவ்வுலகில் பசியுணர்வு, பாலுணர்வு ஆகிய இரண்டே ஆட்டிப் படைக்கின்றன. பசியுணர்வில் அரசியலும் பாலுணர்வில் வாழ்க்கையும் கலந்தே இருக்கின்றன. ஆகவே பாலுணர்வு என்பது தீண்டத்தகாதது அன்று. அதில் தெளிவு பெறுவதே மனித வாழ்க்கை. எஸ்.பொ.வின் கதைகளில் அந்தத் தெளிவு காணப்படுகின்றது.

எஸ்.பொ.வின் எழுத்துகளை 80க்கு முன், 80க்கு பின் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 80க்கு முன் வந்த அவர் படைப்புகள் இன்றைய பின் நவீனத்துவ இலக்கியத்திற்கு அடிகோலியதாகவும், சர்ச்சைகளை ஏற்படுத்தியதாகவும் இருந்தன. 80க்குப் பின் வந்த எழுத்துகள் ஈழத்தமிழர்களின் வாழ்வியல் அரசியல் ஆவணங்களாக இருக்கின்றன. தமிழ்படுத்தப்பட்ட மகாவம்சமாகட்டும். அரசியல் நாவலாகட்டும். ஆப்பிரிக்க மொழி பெயர்ப்பாகட்டும், நனவிடை தோய்தலாகட்டும். அவை யாவும் இலக்கியப் பொக்கிஷங்கள். இன்று எஸ்.பொ. உயிரோடு இல்லை. ஆனால் தமிழ்மொழிக்கு ஊழியம் செய்த அவரின் அளப்பரிய எழுத்துகள் இன்றும் நாளையும் இனி என்றும் இருக்கப் போகின்றன. அவரின் இலக்கிய இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது அவரை மதித்து உணர்வதென்பது அவரின் எழுத்தைப் படிப்பது மட்டுமன்று, தமிழில் பேசுவதும், (இவ்விடத்தில் அவரின் இறுதிக்கிரியின்போது தமிழுக்கு ஊழியம் செய்து மறைந்த எஸ்.பொ.வைப் பற்றித் தமிழில் பேசாதது நெருடலாக இருந்தது என்பது குறிப்பிடவேண்டும்) தமிழில் எழுதுவதும், தமிழுக்கு தொண்டு செய்வது அடங்கியதாகும். தமிழுக்குத் தொண்டு செய்தோர் சாவதில்லை என்ற கவிஞர் ஒருவரின் வாக்குப்படி எஸ்.பொ. சாகவில்லை, எழுத்துகளால் வாழ்கிறார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் புதிது

## SELFIE கைப்படம்

முனைவர் ம.இராசேந்திரன்



“செல்வி புள்ள செல்பி புள்ள” என்று தமக்குக் கிடைத்த ஞானப் பாலில் குழந்தைகளின் பாட்டுச் சத்தம் காதை அடைக்கிறது...

நெல்சன் மண்டேலா மறைவிற்குச் சென்றிருந்த ஒபாமாவின் செல்பி படத்தை உலகம் கண்டித்தது. பிரதமர் வேட்பாளராக இருந்த மோடி காந்தி நகரில் வாக்குப் பதிவு செய்தபோது எடுத்துக்கெண்ட செல்பி படம் தேர்தல் நேரத்தில் பரப்பரப்பானது.

ஒரு நாள் பத்து மணி நேரம் முயற்சி செய்தும் மறைவாக செல்பி எடுக்க முடியாமல் மனம் ஒடிந்து தற்கொலை செய்து கொள்ள ஒருவர் முயற்சி செய்திருக்கிறார். இந்த வருடம் ஜுலை மாதம் 14 வயதுப் பெண் பிலிப்பின்சில் செல்பி எடுக்கும் ஆர்வத்தில் விழுந்து இறந்து போயிருககிறார். 15 வயதுப் பையன் முகத்திற்கு நேரே ஒரு கையில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் செல்பி எடுக்க முயன்றபோது தவறி விழுந்து பலத்த காயம்பட்டிருக்கிறான்.

‘அது என்ன செல்பி? தன்னைத்தானே எடுத்துக் கொள்ளும் படம்தான்’

கும்பிட்டக் கைகளுடன் கோயிலுக்குள்ளேயே தங்கள் வாழ்நாளிலேயே தங்கள் சிலைகளையும் படங்களையும்தாங்களே வைத்துக்கொண்ட தமிழ் அரசர்கள் இருக்கிறார்கள். சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் ஒய்மான் நல்லிக்கோடவை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தனார். ஓவியர் பெருமகன் என்று பாடுகிறார். ஓவியர் மகன் என்பது ஓய்மான் என்று மருவியது என்றும் தமிழ் நாட்டுக் குடிகளுள் ஓவியர் குடியும் ஒன்ற போலும் என்று மா.இராசமாணிக்கனார் கூறுகிறார்.

கீழத் தஞ்சையில் சில ஊர்களில் எழுத்துக்காரர் தெருபோல் இப்போதும் வண்ணாரர் தெருக்கள் உள்ளன. தனக்குத்தானே சிலை நிறுவுவதும் படம் எழுதி வைப்பதும் தமிழர்களுக்குப் புதிதல்ல, ஆனால் செல்பி புதிது.

1839இல் அமெரிக்கர் தன்னைத்தானே எடுத்துக்கொண்ட படம்தான் செல்பி வரலாற்றில் தொடக்கம். படக்கருவியை வைத்துவிட்டு ஓடிப்போய் அதன் எதிரே நின்று படம் எடுத்துக்கொண்டாராம் ஆனால்அது செல்பி என்று அழைக்கப்படவில்லை. கண்ணாடி முன் நின்று ஒருவர் தன்னைத்தானே படம் எடுத்துக்கொண்டிருக்கிறார். அதுவும் செல்பி என்று அழைக்கப்படவில்லை. 1914-இல் 13 வயது ருஷ்ய நாட்டுச் சிறுவன் கண்ணாடி முன் நின்று தன்னைத்தானே எடுத்துக்கொண்ட படம்தான், வயதுச் சிறுவர்கள் எடுத்துக் கொண்ட படங்களில் முதலாவதாம். ஆனால் அதுவும் செல்பி என்று அழைக்கப்படவில்லை. ஏனெனில் செல்பி என்ற சொல் முதல் முதலில் 2002இல்தான் புழக்கத்திற்கு வந்துள்ளது. ஆஸ்திரேலிய இணையதள அமைப்புதான் செல்பி என்ற சொல்லை முதன் முதலில் அறிமுகப்படுத்தி இருக்கிறது.

2005இல் மை ஸ்பேஸ் இணைய தளத்தில் செல்பி படங்கள் வெளிவரத் தொடங்கின. 2006க்குப் பின் இணையத்தில் முகநூல் வந்ததும் செல்பி இளைஞர்களிடம் செல்வாக்குபெறத் தொடங்கியது. தன்னைத்தானே எடுத்துக்கொண்ட படங்களை முகநூலில் நாள்தோறும் இடம்பெறச் செய்தார்கள்.

2010இல் செல்பேசியின் முன்புறமும் படமெடுக்கும் வசதி சேர்ந்தது. இது செல்பியின் செல்வாக்கை உயர்த்தியது. 2012இல் டைம் பத்திரிகையின் சொல்புதிரில் முதல் பத்து இடங்களில் ஒன்றாக செல்பி இடம் பெற்றது. 2013ஆம் ஆண்டில் சிறந்த சொல்லாக (World of the Year) ஆக்ஸ்போர்ட் அகராதியால்அறிவிக்கப்பட்டுள்ளது.

முகநூலில் ஒரு குறிப்பிட்ட வாரத்தில் 368000 முறை செல்பி பயன்படுத்தப்பட்டுள்ளது.

எப்படி இருக்கிறார்கள்.எங்கே இருக்கிறார்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அவ்வப்போது மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கில் விநாடிக்கு விநாடி செல்பி படங்களில் மின்னணு உலகச் சமுதாயவாழ்க்கை போய்க்கொண்டிருக்கிறது. தான் எவ்வாறு மற்றவர்களுக்குத் தெரியப்படுப்பட வேண்டும் என்று விநாடி தோறும் கவலைப்படும் இளைஞர்களின் கனவுகளை செல்பி சுமக்கிறது.

தன்னைத் தானே படம் எடுத்துக்கொள்வதற்குக் கைப்பேசியே வசதியாக இருக்கிறது. பெரும்பாலான செல்பி கைபேசி வழியேதாம் எடுக்கப்படுகின்றன. நாம் நமது கையால் எழுதிக் கொடுப்பதைக் கைப்பட எழுதிக் கொடுத்தேன் என்று சொல்வது வழக்கில் இருக்கிறது. கைச்செலவு என்றால் சொந்தச் செலவு என்று பொருள். கை என்ற சொல்லுக்கு ஒப்பனை என்றும் பொருள் இருக்கிறது.

**எனவே கைப்பேசியால் எடுக்கப்படுகிற தன் கையால் எடுக்கப்படுகிற தன் படத்தைக் கைப்படம் என்று சொல்லலாம். மற்றவர்களால் எடுக்கப்படுவது புகைப்படம் என்றால் தன் கையால்தானே எடுத்துக் கொள்வதைக் கைப்படம் என்று சொல்லாம். கை குட்டை போன்று கைப்படமும் வழக்கில்வரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KASHI KALABHAIRAV ASTROLOGER
# Pandit: Master Ravi Varma



## For The First Time in Australia

TAKE RIGHT DECISION AT RIGHT TIME



## ARE YOU DISAPPOINTED MEETING INDIAN ASTROLOGER

Then once meet our World Famous Indian Astrologer Master Ravi Varma to get permanent solution to all your problem either personal life or proffesional life in just a few days.

### SUGGESTIONS & SOLUTIONS ON:

- Relationship problem,
- Depression & Stress,
- Family Arguments,
- Mis-understanding,
- Worried About Loved One,
- Looking for Job,
- Unhappy in Love Life,
- Financial Problem,
- Your Love Back,
- Childless Couples,

**HE IS A SPECIALIST IN REMOVING Black magic, Evil Spirits, Voodoo, Witch Craft & Jaadoo.**

He solves problem related to Love, Relationship, happiness, Money, Family arguments, Husband wife problem, getting your lover back, removal of black magic, evil spirits, Voodoo, witchcraft, jaadoo etc...



**Indian Astrology, Hand reading, Horoscope reading, Face reading.**

**100% GUARANTEE**

**DANGEROUS BLACK MAGIC REMOVE WITHIN 3DAYS**

**Call for 100% Confidential Appointment**


**M: 0415 475 557 or 0416 822 631**

**1/ 505 Wentworth Ave Toongabbie NSW 2146**

**1 Min walk from station OPEN 7 DAYS 10am - 8pm**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரும் வணங்குவோமே



வாடிக் கிடந்த உலகில் புதுமலர்ச்சியை ஏற்படுத்தவும், பாவ இருளில் மூழ்கிக் கிடந்த உலகில் ஒளியேற்றவும், மாரி மழைக் குளிரிலும்,மார்கழிப் பனியிலும் பாருலகை மீட்க வந்த தேவமைந்தன், பாரிலேயே அதிகூடிய பல்லாயிரம் கோடி மக்களால் திவ்விய பிறப்பைக் கொண்டாடும் தேவ பாலகனாய் அவதரித்தார்.

பிறப்புகளுக்கு சில வேளைகளில் சிறப்புகள் ஏற்படுவதுண்டு. பிறக்கையிலேயே சிறப்போடும், மண்ணகத்தார் வாழ்வை சிறப்பிக்கவும், மாநிலம் போற்றும் பாலகனாய், மாடடையும் கொட்டிலில் பிறந்ததுமல்லாமல் அந்த மாட்டுக் கொட்டிலையே உலகெங்கும் மகிமைப் படுத்திய, ஒளியாகிய தேவமைந்தன் பிறப்பு விழாவை, பெரும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் வேளையிது.

வேதத்தில் கிறிஸ்தவர்கள் உதடுகளில் ஒலித்த ஆமென் என்னும் வார்த்தை, உலகத்தார் எல்லாருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியை அறிவித்த வான தூதர் மறைவதற்கு முன்பே, மரியாளின் சம்மதம் என்னும் வார்த்தையாக ஒலித்தது. பெண்ணை மிக இழிவுபடுத்தி, அடிமைகளாக சிதைத்த மானிடர் மத்தியில் , அன்னையை விண்ணின், மண்ணின் தேவதையாக தமது பிறப்பினாலே உயர்த்திய தேவபாலனை நினைந்து, அளவிட முடியாத மகிழ்ச்சியினால் என் ஆத்துமம் ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது எனப் பாடிப் போற்றிய அன்னையால், அடியவர் கரங்களில் செபமாலை தவழ்ந்தது.

பிரச்சினைகள் உருவாகும் காரணிகளில் ஒன்று நான் எனும்அகம்பாவம். அதனை விடுத்து, தாழ்ச்சி எனும் அணிகலனை அணிந்து கொள்ளுங்கள். விண்ணகத்திற்கு உயர்த்தப்படுவீர்கள் என்பதை வெறும் போதனையாக மட்டுமில்லாமல், வாழ்ந்தும் காட்டிய பாலகனை கொண்டாடும் நாம், எந்த அளவிற்கு பிறரைவிட நம்மை தாழ்த்துவதற்கு முன் வருகின்றோம்.

பிறப்பும் இறப்பும் உன் கையில் இல்லை என்பார்கள். இவற்றை உணரும் அறிவு இருந்தும், உணராதவர்கள் போல் குலப் பெருமை பாராட்டி, பாகுபாடு பாராட்டி, மற்றையோரை இழிவு படுத்திய, உயர் குலமாகிய இனத்தில் பிறந்திருந்தும், அவர்கட்கு எதிராக குரல் கொடுத்த தேவபாலகனை கொண்டாடும் நாம் எல்லோரும் இறைவனால் படைக்கப்பட்ட உயர் படைப்புகள் என்பதை உணர்கின்றோமா?

அல்லது இறைவனின் படைப்புகள் என்பதை உணர முடியாத அறிவிலிகளாக வாழ்கின்றோமா?

இன்று உலகம் புராவும் பல்வேறு சமயங்களை சொல்லி சொல்லியே மனிதர்களை சமயம் பார்த்து கொன்று வருகின்றனர் சமய பயங்கரவாதிகள் தமது வழியே கடவுளை சென்றடையும் வழியென்று சொல்லியே.

கொடுமையாக உயிர்களை அழித்துவிட்டு அழிந்த ஆன்மாக்களாக, அழியாத பாவங்களோடு நரகம் சென்றடையும் மானிடர் மத்தியில் குருட்டு நம்பிக்கைகளையும், பொய் வேதாந்திகளையும் எதிர்த்து, பிறர் அன்புதான் அனைவரையும் விண்ணுலுக்கு அழைத்து செல்லும் பாதையென வழிகாட்டிய பாலகனை கொண்டாடும் நாம், நமய அடையாளங்களால் பிறரை பிரித்துப் பார்க்கின்றோமா?

தெய்வக் குழந்தையை முதன் முதலில் சென்று தரிசித்தவர்கள் ஆடு மேய்க்கும் இடையர்கள். தம்மை ஒரு மேய்ப்பனாகவும் உலகிற்கு அறிமுகப் படுத்தி, ஏழை, பணக்கார வர்க்க பேதத்தை எதிர்த்த பாலனைக் கொண்டாடும் நாம் செல்வத்தால் பிறரை மதிப்பிடுகின்றோமா? சாதியாய், சமயமாய், ஏழையாய், பணக்காரனாய், படித்தவனாய், பாமரனாய், பிரித்துப் பார்த்து ஒன்றே குலம், ஒருவனே தேவன் எனும் கொள்கைக்கு முரணாக வாழாது, குழந்தை இயேசுவைக் கொண்டாடும் நாம் குழந்தையாக மாறாவிடில் விண்ணகத்தை அடைய மாட்டீர்கள் எனும் அவரின் தேவ வார்த்தைக்கு அமைய குழந்தையின் அன்பு இதயமும் மன்னித்து மறக்கும் பண்பும் கொண்டவர்களாய் வாழ முயற்சிப்போம். உங்கள் எல்லோருக்கும், எம் தாயக மக்கள் அனைவருக்கும் இனிய மகிழ்ச்சி நிறைந்த நத்தார் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, பிறக்க இருக்கும் புத்தாண்டு நலன்களையும், அருள் வரங்களையும் நிறைவாய் அள்ளித் தந்து, மனத்திலும், முகத்திலும் என்றென்றும் மகிழ்ச்சி மாறாத வாழ்வுதர, குழந்தை இயேசுவை வேண்டி, வாழ்த்துகின்றேன். வாழ்க என்றென்றும் வளமுடன்

சோனாபிறின்ஸ்


**Gnanam Art Creation**

Printers, Graphic Designers & Artists

We Specialists in:

- Digital & Offset Printing
- Graphic Design
- Brochures & Flyers
- Tickets
- Business Cards
- Magazines
- Newsletters
- Souvenirs
- Receipt / Invoice Books
- Posters (any sizes)
- Digital Banners
- Invitation Cards
- Rubber Stamps
- Tamil Typing
- Kal-Veddu
- And All other Printing...

WE DELIVER ANYWHERE IN AUSTRALIA!

- High Quality
- Reliable Service &
- Reasonable Price!

Contact : Rangan

e-mail: gnanamarts@optusnet.com.au

WEB SITE: www.GnanamArts.com

Mob: 0409 826 521

Ph: 02 9920 0508

ஞானம் ஆட் கிரியேசன்

We satisfy your ambition !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# PERPETUA MONEY TRANSFER

## WorldWide

## We Guarantee the best rate for

## SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- 30 YEARS IN SERVICE ANY WHERE FROM AUSTRALIA
- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVENIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

உங்கட உறவுகளுக்கு
வலு கெதியா
நம்பிக்கையோட
பணம் அனுப்ப
எம்மை அணுகவும்

**Direct Deposit**
Perpetua Money Transfer
BSB No : 033186
Acc No : 401283
Westpac Bank Australia

**Send Money to any Bank in Sri Lanka**

Hub Arcade, 28/15-23 Langhorne st, Dandenong VIC 3175
Tel / Fax : 03 8712 1406 Mob : 0423 094 478
Email : pmoneytransfer@ymail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெல்பேண் விற்றில்சீ தமிழ்ச் சங்கம் வழங்கிய வானமுதத்தின் வண்ணத் தமிழ் மாலை 2014

மெல்பேண் Greensborough Serbian Orthodox Church மண்டபத்தில் மங்கள விளக்கேற்றல், அகவணக்கம் என்ற நிகழ்வுகளோடு ஆரம்பமாகியது. தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை சங்கீத இசை ஆசிரியை ஸ்ரீமதி ரமா சிவராஜாவின் கவின் கலை இசைக் கல்லூரியின் மாணவிகள் சிரோமி குலேந்திரன், கேசினி அருள்நாவலர், சாம்பிகா ஈஸ்வரநாதன், சௌமியா பாலகாந்தன் ஆகியோர் இனிமையான இசையுடன் அழகாகப் பாடியிருந்தார்கள். அதற்கு வாசவன் பஞ்சாட்சரம் தபேலா வாசித்திருந்தார்.

பரத நாட்டிய நடன நிகழ்வாக மெல்பேண் நடன ஆசிரியை ஸ்ரீமதி.மீனா இளங்குமரன் அவர்களின் நடனாலயா நடனப் பள்ளியின் மாணவன் அனிருத் சிவராமகிருஸ்ணமூர்த்தி மிகவும் அற்புதமான பரத நாட்டிய நுணுக்கங்களை அதற்குரிய நடன அசைவுகளுடன், முகபாவனைகள் நிரம்பிய வண்ணம் பாடலுக்கு ஏற்ற வகையில் ஆடியதைப் பார்க்க நன்றாக இருந்தது. அதனை மக்கள் அனைவரின் கரகோசத்தின் மூலம் உணர முடிந்தது எனலாம்.

விற்றில்சீ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு.வில்லியம் இராஜேந்திரம் தனதுரையில் சங்கத்தின் கடந்த கால, நிகழ்காலத்து செயற்பாடுகள் மற்றும் அனைத்து தமிழ் மக்களின் ஈடுபாடுகள் பற்றித் தெரிவித்து சகலருக்கும் நன்றி கூறியிருந்தார்.

மெல்பேண் ஸ்ரீமதி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரன் அவர்களின் நிருத்தா இந்தியன் பைன் ஆர்ட்ஸ் நடனப்பள்ளியின் மாணவிகள் Hansini Pelenda, Simi Abraham, Nilasha Weerathunga, Sharmitha Selvarajah பரத நாட்டியப் பாடலுக்கு ஏற்றவாறு மிகவும் அற்புதமான வகையில் நடன அமைப்புகளை எடுத்து வந்திருந்தார்கள். பார்வையாளர்கள் அனைவரும் தங்கள் கரகோசத்தினைக் கொடுத்து வரவேற்றார்கள். அதற்கு ஏற்றவாறு ஒளி, ஒலி அமைப்புகள் நன்றாக இருந்தது என்று சொல்லாம்.

Victoria State Parliament, Mill park பாராளுமன்ற உறுப்பினர் Lily D'Ambrosio விருந்தினராக சமூகம் தந்து தனது விருந்தினர் உரையை தமிழில் மாலை வணக்கம் என்று ஆரம்பித்து தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வதாகக் கூறியிருந்தார்.

சமூக வானொலியான வானமுதம் தமிழ் வானொலி ஒலிபரப்புச் சேவையைத் தந்துதவிய PlentyValley FM நிறுவனத்தாரின் சார்பில் பெண்மணி (Densie Kuchmar) ஆயுசு அவர்கள் வருகை தந்திருந்தார். 2014 ம் ஆண்டிற்குரிய வானமுதம் வானொலி நடாத்திய நிதி சேகரிப்பின் மூலம் கிடைத்த ஆயிரம் வெள்ளிகளுக்குரிய காசோலையை சங்கத்தின் நடப்பாண்டு உப தலைவர் திரு.அன்ரன் நியூட்டன் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார். அத்துடன் அனைத்து தமிழ் மக்களுக்கும் அவர் நன்றி தெரிவித்து தனது உரையை வழங்கியிருந்தார்.

மெல்பேண் தமிழ் இசைப் பாடகர்களான எஸ்.ரவீந்திரன், வின்சன் அருளப்பன், கார்த்திக் ஸ்ரீதரன், திருபவன் தர்மகுலேந்திரன், சாஜித்தன் சாம்பசிவம், சரண்யன் ரஞ்சித், கிரிஷிகன் சீவராஜா பாடகிகளான நிவேதா நியூட்டன், சுவாதி கிருஸ்ணமூர்த்தி, ஆகியோர் தமது இனிமையான குரல்களில் காதுக்கினிய சுவைமிக்க, பிரபல்யமான பாடல்களை ரசிகர்களின் கரகோசத்தின் மத்தியில் பாடியிருந்தார்கள். அவர்களின் பாடல்களுக்கு ஏற்ற வண்ணம் இசைக் கலைஞர்களான வைத்தியகலாநிதி.செல்வேந்திரா, வாசவன் பஞ்சாட்சரம், றொஹான் அலோசியஸ், உசான் சிவநாதன், செ.சீவராஜா, கீர்த்திகன் சீவராஜா, கிரிஷின் சீவராஜா, சரண் சுகுமார், சாயிரன் சுகுமார், ஆகியோர் அற்புதமான இசையை அள்ளி வழங்கியிருந்தார்கள்.

அன்றைய தினத்தை தனது பிறந்த நாளாகக் கொண்டாடிக் கொண்டிருந்த சிறப்பு விருந்தினரான பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தினம் அவர்கள் பொப்பிசைப் பாடல்களைப் பாடி அனைவரையும் அந்தக் காலத்து நினைவுகளுக்குக் கொண்டு சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடா;ந்து வாழ்நாள் சாதனையாளரான பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தினம் அவர்களின் அளப்பரிய சேவையைப் பாராட்டி விற்றில்சீ தமிழ்ச் சங்கம், வானமுதம் வானொலி குடும்பம், மற்றும் தமிழ் அன்பர்கள் ஆதரவாளர்கள் சார்பில் திரு.வில்லியம்; இராஜேந்திரம் அவர்கள் கௌரவிப்பினைச் செய்திருந்தார். பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தினம் அவர்களின் மனைவி, மகள் குடும்பத்துடன் அனைவரும் மேடையில் பிரசன்னமாயிருந்தமை பார்க்கும் போது மனம் நிறைந்த ஒரு நிகழ்வாக இருந்தது. ஒவ்வொரு கலைஞனையும் அவன் வாழும் காலத்தே சேவைகளை, சாதனைகளை மதித்து, வாழ்த்தி கௌரவிக்கப்பட வேண்டும். நகைச்சுவை நாடகக் கலைஞனும் சமூக சேவையாளருமான சபார் நானா (திரு.ரவி பத்மநாதன் ) அவர்கள் பொப்பிசைப் பிதாவிற்கு அவரது சேவையைப் பாராட்டி நினைவு பரிசு கேடயத்தினை வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் வாழ்வாதாரம் இன்றி வாழும் எமது தாயக மக்களின் முன்னேற்றத்தில் அளப்பரிய பங்காற்றும் பொப்பிசைப்பிதா அவர்களின் நற்பணிக்கு 3000 அவுஸ்திரேலிய வெள்ளிகளுக்குரிய காசோலையும் வழங்கப்பட்டது.

வைத்திய கலாநிதி ஜெயமோகன் அவர்களின் கதை பிரதி ஆக்கமான நகைச்சுவைப் பட்டிமன்றம் The Bloody Headache என்ற நிகழ்வு இறுதி நிகழ்வாக அரங்கேறியது. Ozy Creation நாடகக் கலைஞர்களான எட்வேட் அருள்நேசதாசன், சபார் நானா, நவரத்தினம் அல்லமதேவன், நிருத்தசொரூபி தர்மகுலேந்திரன், தேவயானி மகிந்தன், எட்வேட் மரியதாசன் ஆகியோர் நடித்திருந்தனர். மெல்பேண் வாழ் தமிழ் கணவன் மனைவி இருவருக்கும் இடையே அன்றாடம் வாழ்க்கையில் நடைபெறும் சில்மிசங்களையும், பிரச்சனைகளையும் அடிப்படையாகக் கொண்ட நகைச்சுவைப் பட்டி மன்றம். பார்வையாளர்கள் அனைவரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த நிகழ்ச்சி. சற்று நீண்டதாக அமைந்து விட்டது.

இரவு உணவாக அறுசுவை உணவு வழங்கப்பட்டது. ஒலி, ஒளி அமைப்பினை வாசவன் பஞ்சாட்சரம் மிகவும் திறமையாகச் செய்திருந்தமை நிகழ்சியை மேலும் மெருகூட்டியிருந்தது.

வானமுதம் வானொலி அறிவிப்பாளர்கள் எட்வேட் அருள் நேசதாசன், ஸ்ரீரஞ்சன் ஸ்ரீரங்கநாதன், நீனா டேரியஸ் ஆகியோர் நிகழ்ச்சிகளைத் மிகவும் திறம்படத் தொகுத்து வழங்கியிருந்தார்கள்.

**நவரத்தினம் அல்லமதேவன்,**
**மெல்போ்ண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INDOVISION

# Offering Australia & New Zealand
# The 3 Best Tamil Channels

Watch SUN TV, Kalaigner TV ASIA, Jaya TV and SunMusic direct to Australia and New Zealand, time delayed to suite Australian times.

Watch all your favourite
**Tamil TV Shows**



**For Just A$ 39.95 Month**

Dont Miss Out


Apply Now

Australia: 02 9825 3180

## QUALITY TAMIL SHOWS
## DIRECT TO YOU



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 63 நாட் அவுட்

**63** ரன்கள்... நாட் அவுட்' பேட்ஸ்மேனாக உலகைவிட்டு மறைந்துவிட்டார் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஃபிலிப் ஜோயல் ஹியூஸ். ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் எகிறிவந்த ஒரு பௌன்ஸர் பந்து தாக்கியதால் ஃபிலிப் ஹியூஸ் உயிர் இழந்தது, ஒட்டுமொத்த விளையாட்டு உலகத்தையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது!

நவம்பர் 30 அன்று ஹியூஸின் 26வது பிறந்த நாள். நவம்பர் 25ம் தேதி ஷெஃபீல்டு ஷீல்டு போட்டி தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன், '26 வது பிறந்த நாளுக்கு முன்பாக இன்னொரு சதத்தை அடிக்கப்போகிறேன்' என தனது நெருங்கிய நண்பருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பியிருக்கிறார் ஹியூஸ். ஆனால், பிறந்த நாளுக்கு மூன்று நாட்கள் முன்னதாகவே இறந்து விட்டார்.

சவுத் ஆஸ்திரேலியா அணிக்கும் நியூ வேல்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி. சவுத் ஆஸ்திரேலிய அணிக்காகக் களம் இறங்கிய ஹியூஸ், 161 பந்துகளில் ஒன்பது பௌண்டரிகளுடன் 63 ரன்களில் விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது சவுத் ஆஸ்திரேலியா இரண்டு விக்கெட்டுகளை இழந்திருக்க, நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக 22 வயதான சீன் அபாட் பந்து வீசிக்கொண்டிருந்தார். ஒன்பது ஓவர்கள் வீசியிருந்த சீன் அபாட்டுக்கு விக்கெட்டுகள் எதுவும் விழவில்லை. அதனால் 10வது ஓவரை மிகவும் ஆக்ரோஷமாக வீசினார். அந்த ஓவரின் மூன்றாவது பந்தை அவர் பௌன்ஸராக வீச, அதைத் தடுக்க முற்படாமல் ஹூக் ஷாட் அடிக்க முயற்சித்தார் ஹியூஸ். ஆனால், பந்து பேட்டில் படாமல் மினி பீரங்கிக் குண்டுபோல சீறிச் சென்று, ஹியூஸின் பின்கழுத்துப் பகுதியைத் தாக்கியது. பந்து தாக்கிய அடுத்த நொடியே நிலைகுலைந்தார் ஹியூஸ். சில நொடிகள் தலையைக் குனிந்து நின்று சமநிலைக்கு வர முயன்றார். ஆனால், சமாளிக்க முடியாமல் உடனடியாக பிட்சிலேயே சுருண்டுவிழுந்தார்.

விளையாட்டு வினையாகிவிடும் என்பது பழமொழியாகத்தான் இருந்தது கடந்த 25ஆம் தேதிக்கு முன்னால் வரை...

பந்து கையை விட்டு நழுவியதும் தரையில் பட்டு ஆளுயரம் எழுந்து பந்தை எதிர் கொண்ட பேட்ஸ்மேன் பிலிப் ஹியூஸை நோக்கி செல்ல, கண் இமைக்கும் நேரத்தில் பந்து தலையில் தாக்கியதில் தரையில் மயங்கி விழுதார் பிபிப் ஹியூஸ்.

அந்த நிமிடம் முதல் ஒவ்வொரு நிமிடமும் கிரிக்கெட் உலகைத் தாண்டி அனைவரிடமும் பதட்டமும் பரபரப்பானதாகவும் மாறிப்போனது.

அப்போது நினைவு இழந்தவருக்கு, தீவிர மருத்துவ சிகிச்சை அளித்தபோதும், தனது குடும்பத்தாரையும் ரசிகர்களையும் தவிக்க விட்டு. கோமா நிலையிலேயே மரணத்தைத் தழுவி உள்ளார் ஹியூஸ். ராக்கெட் வேகத்தில் சீறிவந்து தாக்கிய அந்த பௌன்ஸர், ஹியூஸின் மூளையில் ரத்தக் கட்டையும் ரத்தக் கசிவையும் ஏற்படுத்தி உயிர் இழப்புக்குக் காரணமாகிவிட்டதாக பின்னர் அறிவித்தனர் மருத்துவர்கள். பௌன்ஸராகச் சீறிவந்த பந்துதான் ஹியூஸ் கண்ட கடைசிக் காட்சியாக இருந்திருக்கும்!


1988ல் ஆஸ்திரேலியாவின் மேக்ஸ்வில் எனும் சிறிய நகரத்தில், விவசாயி ஒருவருக்கு மகனாகப் பிறந்தவர் ஃபிலிப் ஜோயல் ஹியூஸ். உடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும். அவரது பெற்றோர் வாழை சாகுபடி செய்து ஹியூஸையும் மற்ற இருவரையும் படிக்கவைத்தனர். ஹியூஸ் விளையாட்டில் ஆர்வமாக இருப்பதைக் கண்ட அவரது தந்தை, ரக்பி மற்றும் கிரிக்கெட் என இரண்டு விளையாட்டுக்களையும் ஹியூஸை விளையாடப் பழக்கினார். அதில் ஹியூஸுக்கு கிரிக்கெட் மீது தீவிரக் காதல் தொற்றிக் கொள்ள, 17வது வயதில் சிட்னி நகருக்குக் குடிபெயர்ந்து கிரிக்கெட் பயிற்சிகளில் ஆழ்ந்தார். 18வது வயதில் நியூ சவுத் வேல்ஸ் அணிக்காகக் களம் இறங்கி 'மிக இளம்வயதில் சதம் அடித்தவர்' என்ற சாதனையைப் படைத்தார். 2007ம் ஆண்டு ஜூனியர் உலகக் கோப்பையில் ஆஸ்திரேலியா அணிக்காக விளையாடிய ஹியூஸ் பிராட்மேன் பெயரில் வழங்கப்படும் சிறந்த புதுமுக வீரர் விருதை, தனது 20வது வயதில் பெற்றார். இதனால் 2009ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட தேசிய அணிக்குத் தேர்வானார். 'வெறும் 17 ஷெஃபீல்டு ஷீல்டு போட்டிகளில் விளையாடியவருக்கு வாய்ப்பா?' என அப்போது பல விமர்சனங்கள் எழுந்தன. அதற்கு ஏற்ப அறிமுகமான டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில், உலகின் நம்பர் ஒன் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயினின் பந்தில் டக் அவுட் ஆனார் ஹியூஸ். ஆனால், இரண்டாவது இன்னிங்ஸில் 75 ரன்கள் குவித்து தன் திறமையின் சாம்பிள் காட்டினார். இரண்டாவது டெஸ்ட்டில் ஹியூஸ் ஆடியது ருத்ர தாண்டவம்.

டேல் ஸ்டெயின், மோர்னே மார்க்கல் என உலகின் அதிவேகப் பந்து வீச்சாளர்களைக் கொண்டிருந்தது தென் ஆப்பிரிக்க அணி. ஆனால், அவர்கள் இருவரின் பந்துவீச்சையும் சுலபமாகச் சமாளித்து அதிரடி காட்டிய ஹியூஸ், இரண்டாவது டெஸ்ட்டின் இரண்டு இன்னிங்ஸ்களிலுமே சதம் அடித்தார். முதல் இன்னிங்ஸில் 115, இரண்டாவது இன்னிங்ஸில் 160 ரன்கள் என தென் ஆப்பிரிக்க பந்துவீச்சைத் துவம்சம்செய்தார் 20 வயது ஹியூஸ். மிக இளம்வயதில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் அடித்தவர் என்ற உலக சாதனை, இப்போதும் ஹியூஸ் வசம்தான். முதல் சர்வதேச இன்னிங்ஸில் 0, தொடர்ந்து அரை சதம், அடுத்த இன்னிங்ஸில் 100, அதற்கடுத்து 150 ரன்கள் என ஹியூஸைப்போல் வேறு யாரும் கிரிக்கெட் வாழ்க்கையை இவ்வளவு அதிரடியாகத் தொடங்கியது இல்லை. டெஸ்ட்டில் மட்டும் அல்ல... 2013ம் ஆண்டு இலங்கைக்கு எதிராக விளையாடிய முதல் ஒருநாள் போட்டியிலேயே சதம் அடித்தார் ஹியூஸ். அறிமுக ஒருநாள் போட்டியில் சதம் அடித்த முதல் ஆஸ்திரேலிய வீரர் என்ற சாதனையும் அவர் வசம்தான். கவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷாட், கட் ஷாட் ஆடுவதில் ஹியூஸுக்கு இணை இப்போது யாரும் இல்லை எனச் சொல்லும் அளவுக்குப் பிரமாதமான கவர் ஷாட் மாஸ்டர்!

இடது கை பேட்ஸ்மேன், வலது கை பந்துவீச்சாளர், சப்ஸ்டிட்யூட் விக்கெட் கீப்பர் என ஹியூஸ் ஒரு ஆல்ரவுண்டர். இத்தனை சிறப்புகள் இருந்தும் அடிக்கடி அவுட் ஆஃப் ஃபார்முக்குப் போய்விடுவார். கடந்த ஆண்டு இந்தியா வந்த ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்திருந்த ஹியூஸ், விளையாடிய எட்டு இன்னிங்ஸ்களில் வெறும் 147 ரன்கள் மட்டுமே அடித்தார். அதனால் அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார். உடனே வெறிகொண்டு பயிற்சி எடுத்து கடந்த ஆண்டு உள்ளூர் போட்டிகளில் அதிக ரன்கள் குவித்து சிறந்த வீரர் விருதை வென்ற ஹியூஸ், இந்திய அணிக்கு எதிரான தொடரில் ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடிக்க, கடுமையாகப் பயிற்சி எடுத்து விளையாடி வந்தார். ஆனால், அதற்குள் விதி விளையாடிவிட்டது!




கிரிக்கெட் பேட்ஸ்மேனுக்கு பிட்ச் என்பது சொர்க்கம் போன்றது. கிரிக்கெட், கிரிக்கெட் என்றே வாழ்ந்த ஹுயூஸ் என்கிற 25 வயது இளைஞனின் உயிர், அந்த சொர்க்கத்திலேயே பிரிந்திருக்கிறது!

இறுதிச் சடங்கில் கேப்டன் கிளார்க் கண்ணீரஞ்சலி செலுத்தினார்.

ஏராளாமான கிரிக்கெட் வீரர்களும், பொது மக்கள் பலரும் ஹியூசின் உடலுக்கு கண்ணீரஞ்சலி செலுத்தினர்.

இதில் கலந்துகொண்ட அணியின் கேப்டன் கிளார்க் தனது இரங்கல் செய்தியைப் படித்தார்.

அதில், "நீ எங்கே போனாய் என்று எனக்குத் தெரியவில்லை. உன்னை நான் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். நிச்சயம் ஏதாவது ஒரு இடத்திலிருந்து நீயும் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பாய்...

அவனது முகத்தை மீண்டும் காண ஆசைப்படுகிறேன். மைதானத்தில் அவனை மீண்டும் பார்க்க விரும்புகிறேன். கடந்த வியாழன் இரவு, சிட்னி கிரிக்கெட் மைதானத்தின் புல் வெளியில் நான் நடந்து சென்றபோது, இதே புல்வெளியில் நீயும் நானும் செலவிட்ட நேரங்களை எண்ணி பார்க்கிறேன்....

அவனது வாழ்க்கையில் அனைத்துமே கிரிக்கெட்தான். இந்த மைதானம் உன் அடையாளத்தை என்றுமே மறக்காது. அமைதியாக தூங்கு தம்பி.. நானும் ஒரு நாள் வருவேன்!" என்று கண்ணீர் மல்க உருக்கமாக படித்தார்.

கிளார்க்கின் இரங்கல் செய்தி இறுதி அஞ்சலி செலுத்த வந்தோர் அனைவரையும் கண்கலங்க வைத்தது.

உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களும் , முன்னாள்,இன்னாள் வீரர்களும் வருத்தத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

ஹியூஸ் எனும் வீரன் மறைந்தாலும் அவன் இனி வருங்கால கிரிக்கெட்டைப் பாதுகாக்கும் பணியைச் சிறப்பாக செய்துவிட்டுச் சென்றுள்ளார். கிரிக்கெட் வரலாற்றில் ஹியூஸின் மறைவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகவே பதிவாகும்.

சாலை போக்குவரத்திலோ அல்லது தொழில் முறையிலோ பலத்த காயம் அடைந்திருக்கிறீர்களா ? அப்படியானால் நீங்கள் வழக்கறிஞர் ரோகினி ரத்தினசிங்கம் அவர்களை பின்வரும் விவரங்களில் தொடர்பு கொள்ளவும்

இலவசம் முதல் அறிவுரை

Norwest Lawyers

Norwest Legal & Finance Centre
Suite 25, Level 2, Elevation Building, 6 Meridian Place,
Norwest Business Park, Bella Vista NSW 2153
PO Box 8154, Baulkham Hills BC NSW 2153 or DX 9962 NORWEST NSW
Tel: (02) 8883 1005 and Fax: (02) 8883 1009
E: rohini@norwestlawyers.com Web: www.norwestlawyers.com

*Also at Liverpool, Wollongong and Canberra*

**First consult FREE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் தமிழுக்கு வித்திட்ட தமிழவேள் கோ.சாரங்கபாணி

**வி.டி.அரசு**



கடந்த நூறு ஆண்டுகளில் சிங்கப்பூர்-மலேசிய வட்டாரம் கண்ட முக்கியமான தேசிய-சமுதாயத் தலைவர்களுள் தமிழவேள் கோ. சாரங்கபாணி குறிப்பிடத்தக்கவர். அவரது பணிகளைப் பல கோணங்களில் ஆராய்ந்தால், நாம் அவரைச் சக முன்னோடியாகக் காணலாம் தேசியவாதியாக மதிப்பிடலாம்; சமூகச் சீர்த்திருத்தவாதியாகவும் சமுதாயச் சிற்பியாகவும் நோக்கலாம்; கல்வி, கலை பல இனநல்லிணக்கம், தமிழுணர்வு ஆகிறயவற்றை வளர்த்தவராகவும் சீரிய பத்திரிகையாளராகவும் கணிக்கலாம்.

சிங்கப்பூர் - மலேசிய வட்டாரத் தமிழ் மக்கள் நலனுக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் அரை நூற்றாண்டுக் காலம் பாடுபட்டு (1974) மறைந்த கோவிந்தசாமி சாரங்கபாணி, தமிழகத்தின் திருவாரூரில் (1903)பிறந்தார். பள்ளி இறுதிநிலைக் கல்வித் தேர்ச்சியோடு தமது 21ஆம் வயதில் சிங்கப்பூரில் குடியேறி வணிக நிறுவனம் ஒன்றில் எழுத்தராய் வாழ்க்கையைத் தொடங்கினார் புதிய நாட்டில் கால் வைத்த நான்கே ஆண்டில், எழுத்தாளராக பத்திரிகை ஆசிரியராக சீர்திருத்தவாதியாகப் பொதுவாழ்வில் தலையெடுத்தார்.

இளைஞர் சாரங்கபாணி சிங்கப்பூரில் குடியேறிய பிறகே தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் தலை தூக்கியது. பெரியார் இராமசாமியின் பிரசாரம் வலுத்தது. தொடக்கக் காலத்திலிருந்தே பகுத்தறிவுக் கொள்கைகள் அவரைப பெரிதும் கவர்ந்திருந்தன என்பதில் ஐயமில்லை. 1929இல் பெரியார் மலாயா சிங்கப்பூருக்கு முதன் முறையாகச் சுற்றுப் பயணம் வந்தபோதும் இரண்டாம் முறையாக 1954இல் வந்த போதும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதில் முன்னுக்கு நின்றவர் கோ.சா. தொடக்கக் காலங்களில் குடி அரசு இதழை வட்டாரம் முழுதும் பரப்பியவரும் அவரே.

எனினும் எந்தக் கருத்தையும் செயல் முறையையும் சிங்கப்பூர் மலாயா சூழலுக்குப் பொருந்துமா என்று உரசிப் பார்க்காமலோ தக்கபடி மாற்றியமைக்காமலோ கோ. சா. ஏற்றதில்லை. உதாரணத்திற்கு, 1929 வருகையின்போது சுயமரியாதைச் சங்கத்தை நிறுவுமாறு பெரியார் கேட்டுக்கொண்டதை மறுத்து மலாயாவுக்குத் தமிழர் சீர்திருத்தச் சங்கமே பொருத்தம் என்று கூறினார்.

சாரங்கபாணி முன்னின்று அமைத்த தமிழர் சீர் திருத்தச் சங்கத்தின் செயல் திட்டம், குடியேறிய தமிழ் மக்களோடு குடிவந்த ஒவ்வாத பழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் கைவிடத் தூண்டுவதாய் இருந்தது. தைப்பூச விழாவில் அலகுக் காவடிகளை எதிர்த்த சங்கம், தைப்பூசத்தையோ இறை வழிபாட்டையோ மறுக்கவில்லை. சொற்பொழிவுகள் இலக்கியப் போட்டிகள் வழியாக மக்களின் பழக்கங்களையும் போக்குகளையும் திருத்த முயன்றது.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில். பிரிட்டினின் காலனித்துவ அரசால் ஏராளமான தமிழ் மக்கள் ஒப்பந்தக் கூலிகளாக ரப்பர் தோட்டங்களில் உழைக்கவும் சாலை துப்புரவு, துறைமுக வேலைகளுக்கும் இந்தியாவிலிருந்து சிங்கப்பூர் மலாயாவுக்குக் கொண்டு வரப்பட்டனர். வசதி ஏதுமின்றிக் கேவலமான முறையில் அவர்களைக் கப்பலின் அடித்தளத்தில் திணித்து மலாயாவிலும் சிங்கையிலும் கரையிறக்கினர். அந்த அவலத்தை ஒழிக்கச் சீர்திருத்தச் சங்கத்தின் தலைமையில் இந்திய அமைப்புகளை ஒன்றுகூட்டி பல ஆண்டுகள் முயன்று தொலாளரின் கப்பல் வசதிகளை மேம்படுத்தினார் சாரங்கபாணி.

பிரிட்டிஷ் காலனி ஆட்சியின்போது, இந்து முறைப்படி நடந்த திருமணங்களுக்கோ சீர்திருத்த மணங்களுக்கோ சட்ட அங்கீகாரமில்லை. அவற்றைப் பதிவு செய்து சட்டபூர்வமாக்க வேண்டும் என்று 25 ஆண்டுகள் பிடாப்பிடியாகப் பலவழிகளிலும் சாரங்கபாணி போராடினார். இறுதியாகச் சிங்கப்பூர் தன்னாட்சி பெற்ற (1959) பிறகே அக்குறிக்கோள் ''மாதர் சாசனம்'' வழியாக நிறைவேறியது.

மலாயா-சிங்கப்பூர் வட்டாரத்தில் தமிழ் உணர்வு வளரவும் தமிழ்மொழிக் கல்வி நிலைக்கவும் சாரங்கபாணியின் பங்களிப்பு மிகப் பெரிது. பொது மக்களிடையே மேலோங்க அவர் பல உத்திகளைக் கையாண்டார். தாம் நடத்திய இயக்கங்களையும் நாளிதழையும் அக்குறிக்கோள்களை நிறைவேற்றும் சக்திவாய்ந்த கருவிகளாகப் பயன்படுத்தினார்.

இரண்டாம் உலகப் போர் முடிந்து பிரிட்டிஷ் ஆட்சி இவ்வட்டாரத்துக்குத் திரும்பியபோது சிங்கப்பூரில் முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் இருந்தன. தொழிற்சங்கத் தலைவர்கள் அவற்றைத் தனியார் பள்ளிகளாக நடத்தினர். கம்யூனிஸ்ட் ஆயுதப் போராட்டம் காரணமாக நெருக்கடி நிலையை அரசு அறிவித்தவுடன் தமிழத் தொழிற்சங்கத் தலைவர்கள் பலரும் தலைமறைவாயினர். ஆதரிப்பாரின்றித் தமிழ்ப் பள்ளிகள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டன. அப்போது தமிழ்வேள், பள்ளிகளை நடத்தும் பொறுப்பேற்பதற்காகத் தமிழ்க் கல்விக் கழகத்தை அமைத்து தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பளத் தொகையை அரசாங்கம் மானியமாக வழங்குமாறு செய்தார். பின்னர் உமறுப் புலவர் பெயரில்இவ்வட்டாரத்தின் முதல் தமிழ் உயர்நிலைப் பள்ளியை நிறுவவும் முன்னின்று உதவினார்.

மலாயா-சிங்கப்பூருக்காக முதன்முதலாகப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பது பற்றிப் பிரிட்டிஷ் அரசு ஆய்வுசெய்தபோதே தமிழ்த் துறை வேண்டும் என்று விண்ணப்பம் செய்தவர் சாரங்கபாணி. பல்கலைகழகம் அமைந்த பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருதத்தை முதன்மையாகக் கொண்ட இந்தியத் துறையே பொருத்தம் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி செய்த பரிந்துரையை எதிர்த்துத் தமிழவேள் நடத்திய மக்கள் இயக்கத்தின் விளைவாக தமிழுக்கு முதன்மையிடம் தரும் இந்தியத் துறை அமைந்தது.

அந்த வெற்றி தந்த எழுச்சி அடங்குமுன் தமிழ் எங்கள் உயர் நிதி யைத் தொடங்கினார். அந்த இயக்கம் இரட்டைப் பலனைத் தந்தது பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு நிதியையும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ நூல்களையும் அறித்ததோடு தமிழ மக்களிடையே தமிழுணர்வை மிக ஆழமாகப் பதித்தது.

சாரங்கபாணியின் அருஞ்சாதனைகளில் ஒன்று, தமிழர் திருநாள் என்னும் ஆண்டு நிகழ்ச்சி மூலம் தமிழ் மக்களிடையே ஏற்படுத்திய மனப்புரட்சியும் செயலூக்கமுமாகும். சிங்கப்பூரிலும் மலாயாவின் வடகோடி பெர்லிஸ் நகரிலும் முதன்முதலாக 1952இல் தை மாதம் முதல் நாள் கொண்டாடப்பட்ட தமிழர் திருநாள் பின்னர் ஆண்டு தோறும் பெருவிழாவாக வட்டாரத்தின் எல்லா ஊர்களுக்கும் பரவியது. தை முதல்நாள் திருநாள் சமய விழா அல்ல பண்பாட்டு விழா எனவே இந்து கிறிஸ்தவர் முஸ்லிம் என்னும் வேறுபாடு கருதாமல் தாய்மொழியின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து கொண்டாடும் ஒற்றுமைத் திருநாள் எனச் சாரங்கபாணி எடுத்துரைத்து, கருத்து வேறுபாடுகளையும் எதிர்ப்புகளையும் தணித்துத் தமிழ் மக்களிடம் பேரார்வத்தை வளர்த்தார்.

தமிழா திருநாளை வெறும் கேளிக்கை நிகழ்ச்சியாக்காமல் அதனை ஒற்றுமை நாளாக இசை, நடனம், ஓவியம், இலக்கியம் விளையாட்டு கல்வி ஆகிய துறைகளில் சமூகத்தின் கவனத்தையும் ஆற்றலையும் வளர்க்கும் வாய்ப்பாக நடத்தியதாலேயே அது பயன் தந்தது. ஆண்டுதோறும் புகழ்பெற்ற தமிழறிஞர் இருவரையேனும் இந்தியா, இலங்கையிலிருந்து அழைத்து பத்து நாள்கள் சிங்கப்பூர் மலாயாவில் நடந்த திருநாள் கூட்டங்களில் சொற்பொழிவாற்றச் செய்தார் கோ.சா. திருநாள் நிகழ்ச்சிகளில் சீன, மலாய் கலை நிகழ்ச்சிகளைச் சேர்த்ததோடு, தேசியத் தலைவர்களையும் பிரதமர்களையும் சிறப்பு விருந்தினராக அழைத்து நிகழ்ச்சிகளில் பேசச் செய்தார். இதன் மூலம் தமிழர் பற்றியும் தமிழ்ப் பண்பாடு பற்றியும் தேசிய அளவில் சீன, மலாய் இனத்தவரிடமும் புரிந்துணர்வையும் மதிப்பையும் உயர்த்தினார்.

தமிழர் திருநாள பரப்பிய தமிழுணர்வும் தேசிய அளவில் தமிழுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஏற்பட்ட மதிப்பும் சாரங்கபாணியின் செல்வாக்கும் பல நன்மைகளைச் சமூகத்திற்குக் கொண்டுவந்தன. அவவற்றுள் சிங்கப்பூரில் தமிழ் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக (1959) ஏற்கப்பட்டதும் அதன் காரணமாகத் தலைமுறை தலைமுறையாக இந்தியருள் பெரும்பான்மையினர் தமிழ் கற்கும் சமூகமாக வளர வழி ஏற்பட்டதும் முக்கியமான பயன்கள்.

சிங்கப்பூருக்கும் மலாயாவுக்கும் பிழைப்புத் தேடி 19ஆம் நூற்றாண்டு முதல் குடியேறிய இந்தியர்கள் குடும்பம் அங்கே பிழைப்பு இங்கே என்று இருந்ததாலேயே, அரசியல் பொருளியல் துறைகளில் சீனக் குடியேறிகளைப் போன்ற நிலைக்கு இந்தியர்கள் உயரவில்லை. இதனை மாற்றவேண்டும் என்று கோ.சா பல ஆண்டுகள் எழுதியும் பேசியும்வந்தார்.

முதன்முதலாகச் சிங்கப்பூர்க் குடியுரிமைப் பதிவு 1957இல் தொடங்கியபோது வீடுவீடாகச் சென்று இந்தியர்களைக் குடிமக்களாகப் பதிவுசெய்துகொள்ளுமாறு கோ.சா. கேட்டுக்கொண்டார். 25000 இந்திகயர்கள் ஒருமாதப் பதிவுக்காலத்தில் எளிதில் குடியுரிமை பெற உதவினார்.

கோ.சா.வின் பெருஞ்சாதனையாகவும் அவரது பணிகளுக்கு உறுதுணையாகவும் இருந்தது அவர் நடத்திய தமிழ் முதரசு நாளிதழ். ஒரு காசு விலையில் சீர்திருத்தக் கொள்கையைப் பரப்புவதற்காகத் 1935 தொடங்கப்பட்ட வார ஏட்டை சிங்கப்பூர் மலேசிய இந்தியச் சகத்தின் வலுவான குரலாகவும் சிறந்த நாளேடாகவும் வளர்த்தார்.

சங்கத்தின் குரலாக மட்டுமன்றி எழை எளியவரின் தோழனாகவும் இலக்கிய, கலாசார இதழாகவும் அது விளங்கியது. மாணவப் பருவத்திலிருந்தே கதை கட்டுரை கவிதை எழுதிப் பழகும் வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அவர் 1953இல் தொடங்கிய "தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர்" என்னும் இலவச இணைப்பு பத்திரிகை உலகில் முன்னோடியான அற்புத உத்தி அந்த மாணவர் இதழில் எழுதத் தொடங்கியவர்களில் பலர் பின்னர் சிங்கப்பூர் மலாயாவின் முன்னனி எழுத்தாளர்களாகத தலையெடுத்தனர். மாணவர் இதழ் உருவாக்கிய உணர்வும் ஆர்வமும் மலேசியாவில் பல கிளைகளைக் கொண்ட துடிப்புமிக்க இளைஞர் அமைப்பைத் தோற்றுவித்தது. அது இன்றும் மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை என்னும் பெயரில் சிறப்பாகச் செயல்படுகிறது.

தமிழவேள் கோ.சாரங்கபணி அவர்களை நேரில் கண்டறியாதவர்கள்கூட இன்றும் பாசத்தோடும் நன்றியுணர்வோடும் அவர் புகழ் பேசுகிறார்கள். பயனைத் துய்ப்போர் வித்திட்டவரையும் வளர்த்தவரையும் நினைத்துப் பார்ப்பது அபூர்வம். இவ்வகையில் சிங்கப்பூர்-மலேசிய மக்கள் அசாதாரணமானவர்கள். இக்கருத்துக்குச் சான்றாக ஓர் அண்மை நிகழ்ச்சியைக் கூறலாம். சாரங்கபாணி நூற்றாண்டு விழாவின் சிறப்பம்சமாக 2004 ஜனவரி மாதம் சிங்கப்பூர் மக்கள் தொடங்கிய "கோ.சாரங்கபாணி கல்வி அறக்கட்டளை நிதி"க்கு 1,1மில்லியன் சிங்கப்பூர் வெள்ளி (101லட்சம் வெள்ளி அல்லது ஏறக்குறைய 2,7 கோடி ரூபாய்) சேர்ந்தது. இந்த நிதியை மக்கள் சில வாரங்களில் நிரப்பினர்.

சாரங்கபாணி குறுகிய வகுப்புவாதி அல்ல, இந்திய வம்சாவளியினர் அனைவரது ஒற்றுமையும் ஒருமித்த முன்னேற்றமே அவர் குறிக்கோள் பிற இன மக்களோடு கைகோத்து இந்தியச் சமூகம் தேசிய இனமாக மதிப்புடன் வாழவேண்டும் என்பது அவர் இலக்கு.

அவர் பட்டம் பதவிகளை நாடவில்லை, ஆடம்பரங்களுக்கு அடிமையாகவில்லை. தன்னைப் பின்னுக்குத் தள்ளி, ஏழை எளியவர்களின் நலனை முன்னுக்கு வைத்தார். தான் உயர்வதற்காக மக்களை அவர் ஏணியாகப் பயன்படுத்தவில்லை. மாறாக மக்கள் முன்னேற வழிகாட்டினார். தங்கள் தோளில் சவாரி செய்யும் தலைவராக அவரை மக்கள் கருதியிருந்தால் அவரை ஒதுக்கியிருப்பார்கள். ஆனால் தங்கள் தோழராகவே அவரை மதித்துப் போற்றினர்.

ஆழ்ந்து எண்ணிப் பார்த்து தொலை நோக்குடன் தக்க குறிக்கோள்களை வகுத்துக்கொண்டு அவற்றை அரும்பாடுபட்டு நிறைவேற்னார். அவர் சாதனைகள் தலைமுறை மாற்றத்தையும் தாண்டி வாழ்கின்றன. சாரங்கபாணி செய்த பணிகளின் பலனை இந்தியச் சமூகம் எப்போதையும்விட இப்போது அதிகமாக அனுபவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆண்டாளைப் பற்றிப் பேசினால் நெகிழ்ந்து போகிறார் ஹெலன். விழிகளில் கண்ணீர் பூக்கிறது. ஆண்டாள் சந்நிதி முன்பு மணிக்கணக்கில் நின்று தியானிக்கிறார். திருப்பாவையும், நாலாயிர திவ்ய பிரபந்தமும் எப்போதும் கைகளில் இருக்கிறது. அவரது கணவர் பீட்டர் ஒரு குறிப்பேட்டோடு சுற்றுகிறார். ஆண்டாள் பற்றியும், கோயில் பற்றியும் செலல்லப்படும் எல்லா செய்திகளையும் குறிப்பெடுத்துக் கொள்கிறார்.

54 வயது ஹெலனும் 63 வயது பீட்டரும் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரைச் சேர்ந்தவர்கள். பீட்டர் பொறியாளர், அரசுத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு சுற்றுலா வந்தவர்கள் தற்செயலாக ஸ்ரீவில்லிபுத்தூர் வந்தார்கள். ஆண்டாளின் கதை அவர்களை ஆட்கொண்டு விட்டது. அதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் உற்சவ காலங்களில் ஆண்டாள் சந்நதியில் அடைக்கலம் ஆகிவிடுகிறார்கள். இப்போது அவர்களின் இலக்கு ஆண்டாளின் கதையை உலகம் முழுதும் கொண்டு செல்வது.

ஹெலன் பேசும் பிள்ளைத்தமிழைக் கேட்கவே இனிக்கிறது. 'எனக்கு இந்தியாவை பற்றி எதுவும் தெரியாது. எங்களுக்கு குழந்தைகள் இல்லை. அதுல கொஞ்சம் மன வருத்தம் உண்டு. பீட்டருக்கு பென்ஷன் வருது நிலங்கள் வீடுகள் கடைகள் இருக்கு போதுமான அளவுக்கு பணம் கிடைக்குது. நிம்மதி தத்துவங்கள், சமயங்கள் கோயில் கலைகள் பத்தி தெரிஞ்சுக்கிறதுல ரெண்டு பேருக்குமே ஆர்வம் உண்டு. பல நாடுகளுக்குப் போயிருக்கோம். இந்தியாவோட சமய நடைமுறைகள் வழிபாட்டு முறைகள் மட்டும் தெய்வத்துக்கு நெருக்கமா இருக்கறதை உணர்ந்தோம். அதிலயும் ஆண்டாள் அளவுக்கு எங்களை உலுக்கி எடுத்தது யாருமில்லை. அவ முகத்தைப் பாத்துக்கிட்டே உக்காந்திருக்கணும் போலிக்கு. அவளோட முகத்துல இருக்கிற அந்த புன்னகையிலேயே நம்ம எல்லா கேள்விகளுக்கும் பதில் இருக்கு எல்லோருக்கும் கடவுளை சரணாகதி அடையுறதுதான் லட்சியமா இருக்கு. சாதரண மனிதரும் உறுதியான பக்தி இருந்தா கடவுளை அடையலாம்கிற உண்மையை ஆண்டாள் எங்களுக்கு உணர்த்துனா.'

'முதன் முறை நாங்க வந்தபோது ஆடிப்பூர உற்சவம் நடந்துச்சு சாதாரணமா கோயிலைச் சுத்திப் பாத்துட்டு மணவாள மாமுனிகள் சந்நதியின் சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகளைப் போய் பாத்தோம். ஆண்டாள் காலடியில உக்காந்து என்ன கேக்குறியோ அது கிடைக்கும்னு சொன்னார். ஆண்டாளோட கதையை அப்போதான் கேட்டோம். தெய்வமா மட்டுமில்லாம தாயா மகளா மனசுக்குள்ள உக்காந்திட்டா. அன்னைக்கு இரவு தூங்கவே முடியல. கண்ணை மூடினா, சீக்கிரம் வா சீக்கிரம் வா ன்னு ஆண்டாள் கூட்பிடுகிற மாதிரி இருக்கு. இப்படியொரு சக்தியை இதுக்கு முன்பு நான் உணர்ந்ததில்லை. எனக்கு நேர்ந்ததுதான் பீட்டருக்கும்' என்கிறாள் ஹெலன் நெற்றியில் நீளமான குங்குமப் பொட்டும், காலில் மிஞ்சியும் கண்களில் பக்தியும் அவரின் அந்நியத் தன்மையை நீக்கி மனசுக்கு நெருக்கமாக்குகிறது.

பீட்டர் யோசித்து யோசித்துப் பேசுகிறார் 'திருப்பாவை ஆங்கில டிரான்ஸ்லேஷன் புத்தகம் கொடுத்தார் சுவாமிஜி இறைவனோட ஐக்கியமாகி உருகி உருகிக் காதலிக்கிறா ஆண்டாள். ஒவ்வொரு வரியும் உள்ளுக்குள்ளே உக்காந்து உருக்குது. வருஷத்திலே பத்துநாள் ஆண்டாளோட நிழல்ல இருக்கணும்னு முடிவு பண்ணிட்டோம். திருப்பாவையை ஆஸ்திரேலியாவுல எங்க நண்பர்கள் எல்லாருக்கும் கொடுத்திருக்கோம். வாரத்துல ஒருநாள் எங்க வீட்டுல எல்லோரையும் அழைச்சு ஆண்டாள் கதையை சொல்லிக் கொடுக்கிறோம். நிறைய பேர் ஆண்டாளோட பக்தியைக் கேட்டுத் திகைச்சுப் போயிட்டாங்க. கலாசாரம் வாழ்க்கை முறை எல்லாம் வேற வேறயா இருந்தாலும் சரணாகதி ஒண்ணுதானே... எங்க நாட்டுல ஆண்டாள் பேர்ல ஒரு தெய்வீக அமைப்பை உருவாக்கறது பத்தி யோசிக்கிறோம் அதுக்காகத்தான் ஆண்டாளோட வரலாற்றை புத்தகமா எழுத முடிவெடுத்திருக்கோம்' என்கிறார் பீட்டர்.

திருப்பாவை நாச்சியார் திருமொழி முடித்து இப்போது திவ்ய பிரபந்தத்தை வாசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் இருவரும் அதிகாலையில் கோயிலுக்குச் சென்று ஆண்டாளை வழிபடுவது.... பின்னர் கோயிலைச் சுற்றி வந்து பக்தர்களிடம் பேசுவது



# ஆண்டாள் வரலாறு எழுதும் ஆஸ்திரேலிய தம்பதி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்கள் சொல்லும் விபரங்களை குறிப்பெடுப்பது ராஜகோபுரம் தொடங்கி கருவறை வரையிலுமான கட்டுமானக் கலையை ஆய்வு செய்வது என அவர்களின் அன்றாடங்கள் நீள்கின்றன. இடையிடையே ஸ்ரீரங்கம் காஞ்சிபுரம் என்று கோயில்களுக்கும் பயணிக்கிறார்கள் ஆண்டாள் பற்றிய புத்தகங்களை வாங்கிக் குவிக்கிறார்கள்.

'வாழ்க்ஙக முழுக்க எங்கே சுத்தித் திரிஞ் சாலும் உண்மையான பக்தி உள்ளவங்க இறுதியில் இறைவனோட காலடியில் வந்து சேருவாங்கன்னு ஜீயர் சுவாமிகள் சொன்னார். அது உண்மைதான்.... இலக்கே இல்லாம வாழந்துக்கிட்டிருந்த எங்களுக்கு இப்போதான் இலக்கு தெரிஞ்சிருக்கு. நாங்க தேயலைஞ் சது ஆண்டாளைத்தான் அவளோட நிழல்லயே வாழுற பாக்கியத்தை எங்களுக்கு அவ கொடுக்கணும்' என்று நெகிழ்வோடு ஆண்டாளின் திசையில் கைகூப்புகிறார் ஹெலன்.

அழகிய புன்முறுவலோடு அதையும் பார்த்துக் கொண்டிருக்கிறாள் ஆண்டாள்

**-வெ நீலகண்டன்**



New World
Bakery & Fast Food
Baked to Home Traditions
Good Food! Oven Fresh Service!
Fresh Bread • Flat Roast Bread • Fish Buns
Onion Buns • Patties • Rolls • Pastries
Specially Made Cakes • Stylish Cup Cakes
*Taste your favourites the way they used to be......*
Welcome to Sit & Eat
Open 7 Days 7.00am to 7.00pm
Order Now
0469 599 552
0450 196 551
7 Portico Parade Toongabbie

Shantha's Cakes
*Cakes you won't forget*

A variety of BEAUTIFUL CAKES including vegetarian Made to order!
Call Shaantha Jeyaraj
Ph: (03)8786 3663 e: shaanthajeyaraj@hotmail.com
m: 0401236453 w: www.shanthascakes.com
www.flickr.com/photos/shanthascakes/sets/
'Shantha's Cakes' and 'Shantha's Samayal' Books Available Now

IPS Supermarket
SPICES
இந்திய, பாகிஸ்தான், இலங்கை, பிஜி மற்றும்
ஆசிய நாட்டு மளிகைப் பொருட்கள்...
தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாள DVDs மற்றும் VCDs..
5B Zoe Place, Mt. Druitt
( Next to ALDI )
Ph: 9675 7161 / 0403 111 694
சிறந்த தரம்....! நியாயமான விலை...!!

RAMESH WARA KURUKKAL
( HINDU PRIEST )
திருமணம் WEDDING
சாந்தி SANTHI
வீடு குடிபூரல் HOUSE WARMING
திவசம் THIVASAM
சகல விதமான சைவ வைபவத் தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்
Pho 03 9404 1127
Mob 0414 538 015
MELBOURNE VISHNU DURGA HINDU RELIGIOUS SERVICES


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்துக்காகப் பெண்கள் திருமணவாழ்வைத் தியாகம் செய்யலாமா?

ராணி அழகானவள் அன்பானவள், பெற்றோருக்கு மூத்த மகள், அடுத்து அதிக கால இடைவெளியில்இரண்டு தம்பிகள் பிறந்ததும், தந்தையும் இறந்து போனார். அதனால் குடும்பத்தை தலைமை தாங்கி நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு தாயார் தள்ளப்பட்டார்.

'என் தாயாருக்கு உலக அனுபவம் கிடையாது. வீட்டின் அருகில் உள்ள கடைகளுக்குப் பொருட்கள் வாங்ககக் கூட அவர் சென்றதில்லை. ஒருவர் குடித்து விட்டு நிற்பதுபோல் தெரிந்தால் பயந்துபோய் அந்த வீதியிலே நடக்கமாட்டார். அப்பா இறந்த கால கட்டத்தில் நான் படித்துக் கொண்டிருந்தேன். அம்மா வெளி உலகப் பிரச்சினைகளை எதிர்கொள்ள பயந்ததால், குடும்ப நிர்வாகம் தடுமாறத் தொடங்கியது. அந்த தடுமாற்றத்தைப் போக்க என்னை நானே தைரியமானவளாக காட்டிக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் உருவானது. 12ஆம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டு நான் குடும்ப, நிர்வாகத்தை கவனித்தேன்' என்றாள் ராணி.

பெற்றோருக்கு வீடு கடைகள் சொந்தமாக இருந்ததால் கடைகளில் இருந்து மாத வாடகை வந்துகொண்டிருந்தது. தந்தை நடத்தி வந்த நிறுவனம் ஒன்றையும் அவளே நடத்தினாள் அதனால் வருடங்கள் செல்லச் செல்ல அவளுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகரித்தன.

'பருவ வயதில் என்னை திருமணம் செய்து கொள்ள பலர் முன்வந்தனர். அப்போது என் தம்பிகள் பள்ளியில் படித்துக் கொண்டும், தாயார் உடல் நலம் நிரந்தரமாக சீர்கெட்டும் காணப்பட்டார். அப்போது நான் திருமணம் செய்துகொண்டால், குடும்பப் பொறுப்பை தட்டிக்கழித்து விட்டுசென்றதுபோல் ஆகிவிடும், அதுமட்டுமின்றி என்னை திருமணம் செய்து கொள்ள முன்வந்தவர்களில் சிலர் என் பணத்திலும் அழகிலும் தான் குறியாக இருந்தார்கள். அதனால் தம்பிகள் நல்ல நிலைக்கு வந்த பின்பு திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்து குடும்பத்தை உயர்த்துவதிலே முழுமூச்சாக ஈடுபட்டேன்' என்று சொன்ன ராணிக்கு இப்போது 45வயது.

'இப்போது உங்கள் குடும்பம் எப்படி இருக்கிறது?' என்று கேட்டேன்.

'தம்பிகள் இருவருக்கும் திருமணமாகி விட்டது. தாயில் உடல் நிலையும் நன்றாக தேறிவிட்டது. நிறைய சொத்துகள் சேர்த்திருக்கிறேன். சமூகத்தில் அந்தஸ்தோடு வாழ்கிறேன். என்னைப் பற்றித் தெரிந்தவர்கள் எல்லாம் குடும்பத்திற்காக உழைத்த தியாகி என்று பெருமையாக பேசுகிறார்கள்.' என்று கூறிக்கொண்டே வந்த ராணிக்கு இன்னும் திருமணமாகவில்லை.

'சரியான பருவத்தில் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்து விட்டோமே என்று ஏங்குகிறீர்களா?' என்றேன் அமைதியாக 'ஆமாம்' என்று கூறிவிட்டு சிறிது நேரம் இறுக்கமாக அமர்ந்திருந்தாள். பின்பு கோபமாக பேசினாள் 'எனக்கு இப்போது தாய் மீதும், தம்பிகள் மீதும் சமூகத்தின் மீதும் ஆத்திரம்தான் வருகிறது..,, குடும்பத்தின் நிலையை காரணங்காட்டி நான் பருவ வயதில் திருமணம் செய்து கொள்ள மறுத்த போது என்னை சமாதானப்படுத்தி அம்மா எனக்கு திருமணம் செய்து வைத்திருக்க வேண்டும். தம்பிகள் இளமை முறுக்கோடு வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்த நேரத்திலாவது என்னை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியிருக்க வேண்டும். என்னை திருமணம் செய்து கொள்ள விரும்பி நான் கிடைக்காத எரிச்சலில் வசதி படைத்த ஆண்கள் சிலர் என்னை ஆண் தன்மை கொண்டவள், பெண்மைக்குரிய மென்மை இல்லாதவள் என்று புறம்பேசி எனக்கு என் மீதே கோபத்தை ஏற்படுத்துகிறார்கள் இந்த நிலையில்இப்போது எனக்கு ஒரு புதிய ஆசை தோன்றியிருக்கிறது, அமைப்பற்றி தான் உங்களோடு பேச வந்திருக்கிறேன்' என்றவள் ஒரு புதிய நபரைப் பற்றி என்னிடம் சொன்னாள்.

'அவன் என்னைவிட பத்து வயது சிறியவன் என் மீது மரியாதை கொண்டவன், இரண்டு வருடங்களுக்கு முன்பு என் மீது ஒருதலைக் காதல் கொண்டு என்னை திருமணம் செய்துகொள்ள விரும்புவதாக கூறினான்.

நான் மறுத்து அவனை கண்டபடி பேசி விட்டேன். பின்பு அவன் இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கெண்டான். இப்போது அவனையே என் மனம் சுறறுகிறது. அவனை தனிமையில் சந்திக்க விரும்பி எஸ்.எம்.எஸ் அனுப்பினேன். அவன் வரவில்லை அவன் வந்திருந்தால் அவனிடம் என்னை இழக்கவும் தயாராக இருந்தேன்' என்றபோது அவள் கண்களில் இருந்து நீர் வழிந்தது. நான் அவளை இயல்புக்கு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தேன். நிறைய அழுதாள். 'நான் என் குடும்பத்தில் உள்ள அனைவருக்காகவும் என் இளமையை இழந்தேன். ஆனால் தம்பிகள் விதவிதமாக இளமை வாழ்க்கையை ஜோடியாக அனுபவிக்கிறார்கள் என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை' என்று அவள் உள்ளத்தில் உறங்கும் அத்தனை ஏக்கங்களையும் கொட்டித் தீர்த்தாள்.

'உன்னால் தான் உன் தம்பிகள் இவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். அவர்களை வெறுப்போடு பார்க்காமல் அவர்களோடு இப்போதும் அன்பாக நடந்து கொண்டால் தான் நீ செய்த தியாகம் அர்த்தமுள்ளதாக இருக்கும். உன் உணர்வாலும், உள்ளத்தாலும் அவர்களுக்கு தொடர்ந்து நல்லது செய். உன்னை விட பத்து வயது குறைந்தவன் உன்னை திருமணம் செய்துகொள்ள விரும்பியது தப்பில்லை. ஆனால், அவனுக்கு திருமணம் நடந்த பின்பு அவனை நீ விரும்புவதுதான் தப்பு. அவனை மறந்து விடு, உனக்கு 45 வயது என்பது நீ சொன்னால் தான் தெரிகிறது. அழகும், நல்ல உடல் அமைப்பும் உனக்கு இருக்கிறது. மற்றவர்கள் தப்பாக நினைத்து விடுவார்களோ என்று கருதாமல் இனியும் தாமதிக்காமல் உனக்கு பொருத்தமான துணையை தேர்வு செய்து திருமணம் செய்து கொள்' என்றேன்.

'இப்படி யாராவது சொல்லமாட்டார்களா! என்று தான் நான் எங்கிக் கொண்டிருந்தேன் நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்' என்று மகிழ்ச்சி முகம் காட்டினாள். பெண்கள் குடும்பத்திற்காக தியாகம் செய்வதாக கருதிக்கொண்டு திருமணத்தை வெகுகாலம் தள்ளிப்போடுவதும் பின்பு தவிப்பதும் தவறான வழிகளை கையாள முயற்சிப்பதும் தவிர்க்கப்படவேண்டும்.

**விஜயலட்சுமி பந்தையன்**


**MATHS and ENGLISH CLASSES**

**Maths K-Yr 10 English K-Y6**

**Conducted by Usha Javkhar**

**Contact number 0425 332 804**

**Can make your child reach a very high standard in Maths and English.**

**NAPLAN Coaching also done.**

**Can help with School homework.**

**CLASSES WILL BE CONDUCTED IN FLEMINGTON**

LIKE US ON facebook

https://facebook.com/tamilosaiaustralia

or

visit us on

**www.tamilosai.com.au**

Low tariffs
Best value for your money
Circulating in major cities
Yearly package also available
Discount coupons will be available soon through our sponsors
and much more to come on following issues ....... call us on

**0402 436 196**

**CMJ VIDEO & SPICE CENTRE**



- All Indian, Sri Lankan, Pakistani, Bangladeshi, SouthAfrican & Asian Spices & Grocerics
- Teledramas and Movies
- Original Video, Audio CD & DVD
- Phone Cards

**No. 6/13 Mount Street, Mt. Druitt 2770 Tel: 9832 2765**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை



"பண்டிதமணி" என்று தனது கல்வித் தகுதி கொண்டே தன்னை தமிழ் கூறுநல்லுலகில் வெளிப்படுத்தி சைவத் தமிழ்ப் பணி புரிந்து வாழ்ந்தவர் திரு.சி.கணபதிப்பிள்ளை அவர்கள். யாழ்ப்பாணம் மட்டுவில் கிராமத்தில் திரு திருமதி சின்னத்தம்பிப்பிள்ளை அவர்களின் புதல்வராக 27.06.1899 இல் பிறந்தார்.

உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பெற்ற யா/ மட்டுவில் சந்திர மௌலீஸ்ஸரர் வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியினைக் கற்ற இவர் சிறு வயதிலேயே சைவசமயத்திலும் தமிழ் மொழியிலும் பற்று மிகுந்து காணப்பட்டார்.ஆரம்பக்கல்வியினைப் பூர்த்தி செய்த பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் ஆரம்பிக்கப்பெற்ற யாழ் வண்ணர்பண்ணை சைவப்பிரகாசா வித்தியாசாலையில் சேர்ந்துகொண்டார். அங்கு சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடமும், த.கைலாசபிள்ளை அவர்களிடமும் கல்வி கற்கும் பேறு பண்டிதமணிக்குக் கிடைத்தது. தமிழ் மொழி,சமஸ்கிருதம், சைவசமயம் ஆகியவற்றை அங்கு சிறப்பாகக் கற்றார். தமிழ்மொழி மீதும் சைவத்தின் மீதும் அவருக்கு இயல்பாகவே இருந்த பற்றினால் அவற்றின்மீது அளவற்ற நாட்டம் அவருக்கேற்பட்டது.அதன் பயனாய் அவற்றை ஊன்றிக் கற்கலானார்.

1926 இல் மதுரைத் தமிழ் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றி சிறப்புத் தேர்ச்சி பெற்றார்.இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் செயற்பட்ட சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணையும் வாய்ப்பு பண்டிதமணிக்குக் கிட்டிற்று. 1929இல் அங்கு தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்று ஏறத்தாழ முப்பது ஆண்டுகாலம் இளைப்பாறும்வரை அங்கு கடமை புரிந்தார்.

அன்று ஈழத்தில் சைவத் தமிழ் பண்பாட்டுக் கல்விக்கான உயர் பீடமாகத் திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை விளங்கி நின்றது.அக் கலாசாலையின் குறிக்கோள் வளர்ச்சியில் பண்டிதமணியின் பங்கு அளப்பரியது. உன்னதமான அவர் சேவை காரணமாக அக்கலாசாலை பண்டிதமணியின் ஆளுமை வளர்ச்சிக்குக் களமாக அமைந்தது என்றும் கல்லூரியில் அவர் ஆற்றிய சேவையை நயந்தே பண்டிதமணி எனச் சிறப்புப் பெற்றார் என்றும் கூறுவார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது மாணவர்களூடாக பண்டிதமணி அவர்கள் பெற்றிருந்த சைவத் தமிழ் ஞானம் மேலும் செழுமை பெற அவருக்கு இன்னும் இருவர் உறுதுணையாகவிருந்துள்ளனர். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம்,கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உபஅதிபராக இருந்த சைவ சித்தார்ந்தத் துறை வல்லவரான திரு.பொ.கைலாசபதி. மற்றவர் அதே கலாசாலையைச் சேர்ந்த தமிழ் வல்லாளர் பண்டிதர் வே.மகாலிங்கசிவம். இவர்கள் மூவரதும் கூட்டு சைவப் பணிகளிலும் தமிழ்ப் பணிகளிலும் அன்றைய யாழ்ப்பாணத்தில் பெரும் அதிர்வினை ஏற்படுத்தியிருந்தது. அது பண்டிதமணியின் வாழ்வியலில் அவர் மேற்கொண்ட பணிகளில் பெரும் வேகத்தினைத் தந்து நின்றது உண்மையே..

பண்டிதமணி அவர்கள் மேடைப்பேச்சு, வானொலி உரை, பத்திரிகைக் கட்டுரை, நூல் வெளியீடு, உரைவிளக்கம் எனப் பலமுனைச் செயற்பாடுகளில் தனது சிந்தனைகளை வாரி வழங்கியுள்ளார்.அவரிடம் முனைப்புப் பெற்றிருந்த செயல் வடிவங்களை மூன்று கூறுகளுக்குள் அடக்கி அவதானிக்கமுடியும் என்று பேராசிரியர் சு.வித்தியானந்தன் குறிப்பிடுவர். அவை 1.சமயமும் தத்துவமும் 2.சமூகமும் பண்பாடும் 3.இலக்கியரசனை. என்பனவாகும்.இவற்றுள்ளும் முதலாவது கூறான சமயமும் தத்துவமுமே மிகவும் முனைப்புற்றிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சைவம்,சைவ சித்தாந்தம்,இந்து தர்மம், பண்டைத் தமிழ் இலக்கியம் தொடர்பில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். மேலும் அவை தொடர்பாக பல நூல்களும் பண்டிதமணி அவர்களால் வெளியிடப்பட்டது.

சமயக் கட்டுரைகள், அத்வைத சிந்தனை, கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, இலக்கிய வழி, கம்பராமாயணக் காட்சிகள், தக்ஷ காண்ட உரை என்பன அவற்றுள் சில.

இவற்றுள் முதலிரண்டும் சமய சிந்தனைகளில் மிகக் கனதியானவை. அந்த அளவிற்கு அவை இரண்டும் சமயக் கருத்துக்களை ஆழமாகவும் அகலமாகவும் அலசி நிற்கின்றன.


ஈழத் தமிழ் மக்களின் பண்பாட்டுச் சிந்தனையில் "கந்தபுராணக் கலாசாரம் " என்ற எண்ணக்கருவினைத் தோற்றுவித்த பெருமை பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கே உரியது. யாழ்ப்பாணத்தில் ஊர் ஊராகச் சென்று சைவாலயங்களில் புராணபடலம் என்ற வகையில் கந்த புராணத்திற்கான பொருளை விளக்கிவந்தவர் பண்டிதமணி. அதன் வழி யாழ்ப்பாண சமூகத்தின் பண்பாட்டு இயல்புகளை அவரால் உன்னிப்பாக அவதானிக்க முடிந்ததுள்ளது.கந்தபுராணம் படித்தலையும் பயன் கேட்டலையும் அதன்படி ஒழுகுதலையும் கொண்ட யாழ்ப்பாண சமூகத்தின் பண்பாட்டை விசேடித்துக் "யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம்" என்று விதந்து நின்றார்.

கந்தபுராண தக்ஷ காண்ட உரை நூலை பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழக இந்து மன்றத்தினர் வெளியிட்டனர். நூலையும் நூலாசிரியரையும் யானையில் ஊர்வலமாக அழைத்துவந்து வெளியீடு செய்தமை பெரும் கௌரவமாயிற்று. பண்டிதமணிக்கு 1978 இல் இலக்கியக் கலாநிதிப் பட்டம் கொடுத்து யாழ் பல்கலைக் கழகம் பெருமை பெற்றுக் கொண்டது. 13.03.1986 இல் அவர் மறைந்த போதும் 04.12.1999 இல் இலங்கை அரசு அவர் நினைவாக முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது. பண்டிதமணிக்கு நீண்டதொரு மாணவர் பரம்பரையும் உண்டு.

இத்தகைய சிறப்புகள் பல பெற்ற பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பிரமச்சாரியம் நின்று, தனது வாழ்வு முழுவதையும், திருநெல்வேலி கலாசாலை வீதியில் வாழ்ந்து, சமயப்பணி, சமூகப் பணி, இலக்கியப்பணி, என்பனவற்றிற்கே அர்ப்பணித்தார்.சிலர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும் செய் கருமங்களில் ஓய்ந்து தளர்வுறுவது இயல்பு. ஆனால் பண்டிதமணி அவர்களது சைவத் தமிழ்ப் பணி அவரின் ஓய்வின் பின்னரும் ஓய்வின்றி வேகத்துடனேயே காணப்பட்டது.

**நாயன்மார்கட்டுக் கமலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் நிலா
# பாலசுப்ரமணியம்

மணஹரன்



**பா**லுவை எல்லாரும் பாடும் நிலா என்கிறார்கள். நல்லவேளை நிலா பெண்ணுக்கு உவமை பாலாவுக்கு சொல்லக்கூடாது என எந்த மரபுக்கவிஞரும் வம்புக்கு வரவில்லை.

சாந்தி நிலையம் படத்தில் ஜெமினிக்கு முதல்தமிழ்ப் பாடல் பதிவானாலும், எம்.ஜி.ஆரின் அடிமைப்பெண்ணில்

**ஆயிரம் நிலவே வா ஓராயிரம் நிலவே வா**
**இதழோடு சுவை சேர புதுப் பாடல்**
**இனி பாடப் பாட ஆயிரம்**
**நள்ளிரவு துணையிருக்க நாமிருவர்**
**தனியிருக்க**



**நாணமென்ன பாவமென்ன**
**நடைதளர்ந்து போவதென்ன**
**இல்லை உறக்கம் ஒரே மனம் என்**
**னாசை பாராயோ**
**உன் உயிரிலே என்னை எழுத**
**பொன்மேனி தாராயோ**

எனும் பாடல்தான் முதலில் வெளிவந்தது. புலமைப்பித்தன் எழுதிய இப்பாடலை பி.சுசீலாவோடு பாலா பாடினார். பாடலும் பெரும் புகழ்பெற்று பிரபலமாகியது.

அண்டாஸ் இந்திப் படத்தில் ஒலித்த ஜிண்டாகி எக்ஸபா எனும் பாடலை தமிழில்

**காலங்களே காலங்களே**
**காதல் இசை பாடுங்களே**

எனும்பாடல் ஜண்டகிக்கு மிக இணையான பாடல். பாட்டின் விறுவிறுப்பு பாலாவின் குரலில் இருக்கும்.

ஆராதனா என்ற இந்திப் படத்தில் 'ரூப்புதெரா மஸ்தானா ய்பாரி மேரா தீவானா' கிஷோர் குமார் பாடிய பாடல் கிஷோர் குமார் நன்றாக அனுபவித்துப் பாடி இருப்பார். அந்தப் பாடலை பெரியண்ணன் ஆசிரியர் தெலுக் பாத்தேக் கடற்கரைக்கு வேனில் அழைத்துச் சென்றபோது இசைத்தட்டு கருவி கொண்டுவந்தார். அப்போதுதான் இந்த ஆராதனா படத்தில் வரும் ரூப்புதேரா மஸ்தானா ப்யாரி மேரா தீவானா கேட்டேன். அப்போதெல்லாம் இந்தியின் மோகம்தான். அந்த இந்திப் பாடல்தான் சிவகாமியின் செல்வன் படத்தில் சிவாஜி வாணிஸ்ரீ இணைந்து நடித்திருப்பார்கள். படத்தில் இந்தப்பாடல் இல்லை. ஆனால் இசைத்தட்டுகளில் வெளியாகிவிட்டது அந்தப்பாடல்.

**எத்தனை அழகு கொட்டிக்கிடக்குது**
**எப்படி மனச தட்டிப்பறிக்குது**
**அம்மம்மா உடலெங்கும் சிலிர்க்குது**
**அங்கெங்கே என்னோடு துடிக்குது**
**தினம் வந்து கொஞ்சும்**
**மலர் கொண்ட மஞ்சம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் கேட்கும்
நெஞ்சம் இருந்தாலும் மஞ்சம்
அம்மம்மா உடலெங்கும் சிலிர்க்குது
ஆனாலும் அச்சம் தான் தடுக்குது

இந்தப் பாடலில் பாலா குரலுக்குள் காதலுக்கும் காமத்திற்கும் இடையில் ஒரு காந்தத்தைச் செருகி வைத்து விருந்து படைப்பார். இந்தப்பாடலை இணையத்தில் தேடி கேட்ட பின் மீதியைப் படியுங்கள். பாலாவின் குரலுக்குள் இருக்கும் காந்தத்தை உணர முடியும்.

1970-ல் உத்தரவின்றி உள்ளே வா திரையில் எஸ்,பி,பாலசுப்பிரமணியம், பி.சுசிலாவோடு கவிஞர் கண்ணதாசன் இயற்றி எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்த இந்தப்பாடலும் எந்த வகையிலும் குறைந்த பாடல் இல்லை.

**ம்ம்ம்ம்ம்ம் ம்ம்ம்ம் ஆஹாஹ ஹா ஆஹாஹ ஆ...**
**காதல் காதல் என்று பேச கண்ணன் வந்தானோ?**
**காலம் பார்த்து ஜாலம் செய்ய மன்னன் வந்தானோ?**

பாலா? தம் மனதிற்கு சரியெனப்பட்டதை எந்தச் சூழ்நிலையிலும் சொல்லிவிடுவார். ஒருமுறை பாலாவை நேரடி பேட்டி எடுக்கும் வளர்ந்து வரும் இன்னொரு பாடகி அடிக்கடி இவர் இன்னும் நம்மோடுதான் இருக்கிறார் என சொல்லிக்கொண்டிருக்க பாலா அப்படி ச் சொல்வது தவறு என்று சுட்டிக்காட்டத் தயங்கவில்லை. என்னமோ இன்னும் அவர் போகாமல் நம்மோடு இருக்கிறார் என ஆதங்கப்படுவதாக உள்ளது என விளக்கம் அறித்தார் பாலா.

கண்ணதாசன் இயற்றி எம்.எஸ்.விஸ்வநாதன் இசை அமைத்த கந்தசாமி மகனின் நிழல் நிஜமாகிறது படத்தில் வரும்

**கம்பன் ஏமாந்தான்**
**இளம் கன்னியரை ஒரு மலர் என்றானே கற்பனை**
**செய்தானே கம்பன் ஏமாந்தான்**
**ஆத்திரம் என்பது பெண்களுக்கெல்லாம்**
**அடுப்படி வரைதானே - ஒரு**
**ஆகிக்க நாயகன் சாதிக்க வந்தால்**
**அடங்குதல் முறைதானே**

என்கிற எள்ளல் வேறு குரலில் கேட்க முடியாத ஒன்று. இந்தப்படத்தில் சுமித்ராவிற்கு கடிதம் ஒன்றும் கமல் எழுதுவார். கடிதத்தில் இடைவெளி விட்டு திட்டிவிடுங்கள் என்று இருக்கும் இன்னும் பல விசயங்கள் அதில் ஒன்று. கடிதம் பிடித்திருந்தால் தலையணை அடியில் வைத்துக் கொள்ளுங்கள் என்ற வரி பாலசந்தரால் மட்டும்தான் இது இயலும்.

முத்துராமன், லட்சுமி நடிப்பில் இயக்குனர் வீரா ரத்னா கைவண்ணத்தில் நங்கூரம் எனும் படம் இசை கேமதாசா.

அதில் வரும் ஒரு பார்வை பார்க்கும்போது எனும் பாடலை பைரோஜி வாசித்தார். இந்தப் பாடலுக்குள் மெலிசாய்ப் பயணிக்கிற சோகம் பாடல் நிறைவு பெறும் வரை தொடரும்.

**ஒரு பார்வை பாக்கும் போது**
**உயிர் பாடும் நூறு பாட்டு**
**மறு பார்வை பாக்கும் போது**
**மனம் ஓடும் கேள்வி கேட்டு**
**கோடி வார்த்தைகளை**
**சேர்த்து வைத்து கொண்ட உள்ளம்**
**ஓடி ஓடி அது பாய்ந்து**
**செலலுகின்ற வெள்ளம்**
**நினைக்கிறேன் சொல்ல மொழியில்லை**
**எனக்குத்தான் என்ன நாணமோ**
**நீயும் மௌன ராகம்**
**நானும் மொன கீதம்**
**நீயும் மௌன ராகம்**
**நானும் மொன கீதம்**
**சொன்னால் ஏற்றுக்கொள்வாய்**
**என்னால் முடியவில்லை.**

அந்தக் காலகட்டத்தில் உள்ளவர்கள் நிச்சயம் மறக்கமுடியாத பாடலாக பாலாவின் தமிழ வரவு வரமாக மனதில் படும். பாலாவின் குரலில் சாதாரண பாடலும் உயரிய அந்தஸ்தை அடையும்.

ஒரு பார்வை பார்க்கும்போது பாடலின் உடன்பிறவா பாடலாக மல்லிகை மோகினி படத்தில் ஜி.கே.வெங்கடேஷ் இசை அமைப்பில் உள்ளது அந்தப் பாடல்

**ஒரு பாடலை பல ராகத்தில்**
**உன்னைப் பார்த்துப் பாடினேன்**
**பல ஜென்மங்கள் உன்னை தேடினேன்**
**இன்று ஏறி தாண்டினேன்**
**எந்தன் பாதையை இந்த தேவதை**
**குரல் ஓசையைக் கேட்கின்றேன்**
**உந்தன் ஞாபகம்**
**வரும்போதெல்லாம்**
**நான் வானில் பறக்கின்றேன்**

**விழி மோகனம் தரும் மந்திரம்**
**விழி மோகனம் தரும் மந்திரம்**
**அது மோக காவியம்**

பாலாவின் பாடல்களில் இரசிகனுக்கும் கொஞ்சம் இடம் இருக்கும். அவனுக்கான சோகமும் அதில் அடங்கும்.

இதோ இன்னொரு பாடல் முத்தான முத்தல்லவோ படத்தில் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனுடன் பாலா இணைந்து கவிஞர் வாலி எழுதி மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்த

**எனக்கொரு காதலி**
**இருக்கின்றாள் அவள்**
**ஏழு ஸ்வரங்களில் சிரிக்கின்றாள்**
**கீதம் அவளது வளையோசை**
**கீதம் அவளது தமிழோசை**
**தமிழ் ஓஓஓஓஓஓஓசை**
**எனக்கொரு காதலி**
**இருக்கின்றாள் அவள்**
**ஏழு ஸ்வரங்களில் சிரிக்கின்றாள்**
**என்னுடன் வாழும்**
**இன்னொரு ஜீவன்**
**மெல்லிசைகளாகும் எந்நாளும்**
**வையகம் யாவும் உன்புகழ் பேச**
**தைவதம் ஆகும் எதிர்காலம்**
**எதிர்காலம்**

வயலின் இசை கேட்டாலே முதலில் ஞாபகத்திற்கு வருபவர் குன்னக்குடி வைத்தியநாதன். ஆனால் பட்டினப்பிரவேசம் படத்தில் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் கண்ணதாசன் இயற்றிய

**வான் நிலா நிலா அல்ல**
**உன் வாலிபம் நிலா**
**தேன் நிலா எனும் நிலா**
**என் தேவியின் நிலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயில்லாத நாளெல்லாம்
நான் தேய்ந்த வெண்ணிலா
மானிலாத ஊரிலே
சாயல் கண்ணிலா?
பூவிலாத மண்ணிலே
ஜாடை பெண்ணிலா?

தெய்வம் கல்லிலா?
ஒரு தோகையின் சொல்லிலா?
பொன்னிலா? மொட்டிலா?
அவள் காடும் அன்பிலா?
இன்பம் கட்டிலா
அவள் தேகக் கட்டிலா?
தீதிலா காதலா
ஊடலா கூடலா?
அவள் மீட்டும் பண்ணிலா?

இந்தப் பாடலும் பாலாவிற்கு மிகப் பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்த பாடலாகும்.

அந்த வரிசையில் வரும் பொழுது மறக்க முடியாதவாறு கைக்குட்டையாய் உடன் வரும் இந்தப்பாடலும்

விழியிலே மலர்ந்தது உயிரிலே கலந்தது
பெண்ணென்னும் பொன்னழகே அடடா எங்கெங்கும் உன்னழகே
அடடா எங்கெங்கும் உன்னழகே
உன் விழியே போதுமடி மனம் மயங்கும்
மெய் மறக்கும்
புது உலகின் வழி தெரியும் பொன்விளக்கே தீபமே

இளைஞர்களின் இதய கீதமாய் எப்போதும் அணிந்திருக்கும் சட்டையின் காலரை பிடித்து இழுத்து செல்லும்.

சின்ன புறா ஒன்று எண்ணக்கனாவினில்
வண்ணம் கெடாமல் வாழ்கின்றது
நினைவில் உலவும் நிழல் மேகம்
நூறாண்டுகள் நீ வாழ்கவே
நூறாண்டுகள் நீ வாழ்கவே
ஒருவன் இதயம் உருகும் நிலையில்
அறியா குழந்தை நீ வாழ்க
உலகம் முழுதும் உறங்கும் பொழுதும்
உறங்கா மனதை நீ காணக்
கீதாஞ்சலி செய்யும் கோயில்மணி
இன்று நாதங்கள் கேட்டாயோ
மணி ஓசைகளே எந்தன் ஆசைகளே
கேளம்மா

அப்புறம்

உனக்கு மட்டுமல்ல எனக்கும் இன்றைக்குதான் தலை பிரசவம்

பாரதிராஜா படத்திற்கு இளையராஜா இசையில் பாட்டெழுதிவிட்டு வந்திருக்கிறேன் என இதுவரையில் நான் எனும் நூலில் கவிஞர் வைரமுத்து சொல்லும் வரிகளுக்கு சொந்தமான பாடலான

ஹே ஹே ஹிம் லலா
பொன் மாலைப் பொழுது
இது ஒரு பொன்மாலைப் பொழுது
வான் மகள் நாணுகிறாள்
வேறு உடை பூணுகிறாள்

இது ஒரு மாலைப் பொழுது
ஹம் ஹே ஹா ஒரு ஹிம்ஹூம்
வானம் எனக்கொரு போதிமரம்
நாளும் எனக்கது சேதி தரும்
வானம் எனக்கொரு போதிமரம்
நாளும் எனக்கது சேதி தரும்
ஒரு நாள் உலகம் நீதி பெறும்
திருநாள் நிகழும் சேதி வரும்
கேள்விகளால் வேள்விகளை
நான் செய்தேன்

இதனைப் பாடிய பெருமையும் பாலாவுக்கு உண்டு.

திருவிளையாடல் திரையில் சிவனுக்கும் தருமிக்கும் வினாவும் விடையும் தொடரும் தொடரில் புதிதாய் இணையும் வினாவும் விடையும்.

பாடல் என்றால் பாலா பாலா என்றால் பாடல்.


## Disclaimer

All published articles in this magazine are having no motive to disturb or defame anybody and any facts produced in the published articles may not be exactly correct. The materials published are selected interest and views of the author's of the articles and views expressed therein are not necessarily those of TamilOsai. Materials published herein should not be reproduced in part or whole without written consent from Yesfore Pty Ltd. Allthe rights reserved to Yesfore Pty Ltd.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VERON GARDENS

63 - 67, Veron Street, Wentworthville, NSW

Now Selling

**Brand New 1,2 & 3 Bedroom Apartments**

Price from $460,000




- 5 Mins walk to Wentworthville Railway Station
- 5 Mins drive to Westmead Hospital
- 5-7 mins drive to Parramatta
- Woolworths & Coles with 1 KM
- Centre Location – Close to M2, M4 & M7
- Close to Library and Community Centre
- Close to high quality medical facilities in Wentworthville
- Popular schools nearby
- Dedicated Children Play Area
- Fully Tiled Designed and built by reputed Architect & Builder
- Secure Parking
- Walking distance to Temple, Church & Popular Clubs Close to Parks, swimming Pool &
- Other recreational facilities

**Ray White**

Wentworthville

## CONTACTS

Sinna Sundaram
m : 0407 900 418

Vasee Rajadurai
m : 0499 959 909

Ground Floor : 13-15 Station Street, Wentworthville, NSW 2145

t; 02 9896 1122

e : sinna.s@raywhite.com

w : raywhitewentworthville.com.au

**Ray White**

Wentworthville



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்திரேலியா தமிழ்ச் சங்கம் வழங்கும்

# இளையோர் கலை விழாவில் ஆடிப் பாட வாருங்கள்!

ஆஸ்திரேலியாவில் வளரும் இளைஞர்கள் குறிப்பாக சிறுவர்கள் பாடல், ஆடல், நாடகம் ஆகிய துறைகளில் ஆர்வத்தை உருவாக்கவும் அவர்களிடம் முளைவிட்டுள்ள திறமையை வளர்க்கவும். வருங்காலத்தில் சிட்னியில் புகழ்பெற்ற தமிழ்க் கலைஞர்களாக உருவாக்கவும் ஆண்டுதோறும் **'இளையோர் கலைவிழா'** நடத்த ஆஸ்திரேலியா தமிழ்ச் சங்கம் முடிவெடுத்துள்ளது. அதன்படி முதலாவது 'இளையோர் கலைவிழா 2015இல் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பாடல், ஆடல், நாடகம் ஆகிய துறைகளில் தங்கள் திறமைகளைக் காட்ட ஒரு வாய்ப்பு வந்துள்ளது. இதற்காக கலைத்துறைச் சார்ந்தவர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு தகுதியானவர்களைப் பக்கச் சார்ப்பு இல்லாமல், எவ்வித அழுத்தமும் இல்லாமல் அடையாளம் காணும். இக்குழுவின் நீதியான முடிவுகளில் சங்கம் தலையிடாது. ஆகவே பெற்றோர்கள் ஆர்வலர்கள் மற்றும் தமிழ்ப்பள்ளி நிர்வாகத்தினர் ஆகிய யாவரும் ஆதரவு அளிக்க வேண்டுகிறோம்.

மேதிக விபரங்களுக்கு கீழ்கண்டவர்களோடு தொடர்பு கொள்ளவும்

திரு.ராஜசேகர் - 0404 878 611

போஸ் ஏபிரஹாம் - 0424 901 488

சிவகுமார் வேலாயுதன் - 0411 449 615

சகிகுமார் வீரப்பன் - 0405 553 018


AIRPORT SHUTTLE BUS

Siva

0403 259 273





anstravels.com.au

admin@anstravels.com.au

ans travels

Friendly, Reliable Service

- Airport Pick up & Drop off
- Cruise Pick up & Drop off
- City & Interstate Tours
- Wedding & Function Travels
- Sports Team Tours


விமான நிலையம் செல்ல, சுற்றுலா, திருமணநாள் எதுவானாலும்.. உங்கள் அனைத்து போக்குவரத்து தேவைக்ளையும் பூர்த்திசெய்ய நாடுங்கள்....

We Accept eftpos VISA MasterCard

Printing4you 02 8011 3293



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்

# புரியாமலேயே....



என்னைக் கடந்து சென்ற அவளிடம்
பெயரென்ன? என்றேன்

பெயரா...?
நீயே வைத்துக்கொள் என்றாள்

மெல்லத் தழுவுகிறாயா...ஈ
தென்றல் என்றழைப்பேன்.

இல்லை சாய்த்துவிட்டுப் போகிறாயா...?
புயல் என்கிறேன்

என்னை அள்ளிக்கொண்டு போகிறாயா...?
வெள்ளம் எனச் சொல்வேன்.

கரையொதுங்கப் பார்க்கிறாயா...? உன்னைக்
கடலாகக் காண்பேன்

புன்னகை இதழ்விரிக்கிறாயா...?
பூவென்று பார்ப்பேன்.

முகம் திருப்பிக் கொள்கிறாயா?
முள்ளாகக் கொள்வேன்

தரிசனம் தருகிறாயா....?
தெய்வமென்று தொழுவேன்.

பதிலேதும் சொல்லாமல்
பாவைநீ செல்கிறாயே...

எதுவுமே புரியாவண்ணம்
ஏனடி மௌனம்? என்றேன்

புரியாத புதிரென்றா
சொல்லுகின்றாய்....?

எனக்குப் பெண்ணென்று பெயர்சூட்டு
பொருந்தும் என்றாள்.

ABIE'S
அபீஸ்
Sri Lankan & South Indian
Vegetarian Food



02 9896 3710
110A Pendle Way
Pendle Hills, NSW 2145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GAGAN 0402991381











## All kinds of Repairs & General Maintenance

All kinds of Gates & Fences - Pool, Garden, Picket, Colourbond, Security Fences, Security Grills, Doors, Screen Doors.

Pergolas, Awnings, Car Ports, Glass Rooms, Screen Rooms, Handrails, Balustrades, Louvres, Provacy Screens, Retaining Walls, Stainless Steel Handrails with wire & glass, Framed & Frameless, Stainless Steel Commercial Kitchens, Tablets, Sinks, Rangehoods, Tandoors, Shop Stands, Shop Fronts & Shop Fitting.

All types of Stainless Steel, Glass, Wrought Iron & Aluminium Work.

All types of Metal work, Custom made Fabrication & Structural Steel. Automatic Remote Controlled Sliding Gates & Swing Gates.

***All work in compliance with Australian Standards***

**Factory & Showroom**

3/40 Charles Street Dunheved Circuit,
St. Marys NSW 2760
PO Box 6700, Blacktown NSW 2148



Tel : (02) 9833 0852
Fax : (02) 8883 1388
Cell: 0449 111 111

Web : www.a1home.com.au
Email: jas@a1home.com.au
ABN: 44 105 366 809

Contact
JAS
for Free Quote

**WE'LL BEAT ANY WRITTEN QUOTE!** **A ONE HOME IMPROVEMENTS PTY LTD**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI GANESH SELECTIONS
TEXTILE & POOJA ITEMS

# CHRISTMAS & NEW YEAR SALE

**Limited Time *SALE* 5/12/14 to 31/12/14**



**Buy 1 Get 2 Free**

**Buy 1 Get 1 Free**

*Conditions Apply

## SRI GANESH SELECTIONS
TEXTILE & POOJA ITEMS **9636 3826**

**118 Pendle Way**
**Pendle Hill NSW 2145**

**SALE!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org